Registered as a News Paper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 08 [23-07-1993] வெள்ளிக்கிழமை ஓசை 155

## தொடர்பு சேவை மூலம் செய்தி அனுப்புவோருக்கு:

யாழ். வன்னி தொடர்புச் சேவை செயலகத்தினால் கையேற்கப்படும் செய்திகள் பாரதூரமான நோய்வாய்ப்பட்டிருக்கும் செய்திகள், மரண அறிவித்தற் செய்திகள், சலுகை அடிப்படையில் அமைந்த செய்திகள், வியாபாரச் செய்திகள், சலுகை அடிப்படையில் அமையாத ஏனைய வழமையான செய்திகள் என்ற வகையில் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆனால் வியாபார நோக்கத்தை பூர்த்திசெய்யும் முகமாக அமைந்தசெய்திகளை அனுப்புபவரும், கையேற்பவரும் தமக்குள் மட்டும் (10ஆம் பக்கம் பார்க்க)

# போர்க் கைதிகள் மீண்டும் 29இல் உண்ணாவிரதம்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் 33 போர்க் கைதிகளும் எதிர்வரும் 29ஆம்திகதி மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப்போவதாக கைதிகளின் உறவினர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர். இதுதொடர்பாக போர்க்கைதிகள் 33பேரும் ஒப்பமிட்ட கடிதம் ஒன்றை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின்மூலம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளனர்.

இக்கடிதத்தை நேற்று மலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் போர்க்கைதிகளின் உறவினர்கள் ஒப்படைத்தனர் எனவும் இக்கடிதத்தின் சில பிரதிகளைப் போர்க்கைதிகளின் உறவினர்கள் சிலர் நேரடியாக எடுத்துக் கொண்டு செல்ல உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இக்கடிதங்களை உரிய சில பிரதிநிதிகளிடம் கையளித்து அவர்களின் உதவியும் கோரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

போர்க் கைதிகள் விடுவிப்பு தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட உடன்பாட்டை முறித்துக் கொண்டதையடுத்து இக்கைதிகள் மீண்டும் உண்ணாவிரதத்தை கடந்த 14ஆம் திகதி ஆரம்பிக்கப்போவதாக முன்னர் அறிவித்திருந்ததும் பின்னர் அவர்களில் ஐந்து பேரின் உடல் நிலை பாதிக்கப்பட்டதையடுத்து சில தினங்களுக்கு உண்ணாவிரதத்தை ஒத்தி வைத்ததும் தெரிந்ததே.

## இராணுவ அணிவகுப்பு மீது புலிகள் எறிகணை வீச்சு

(நமது நிருபர்)

ஒட்டகப்புலம் காவலரணின் உட்புறத்தில் சிறிலங்கா இராணுவ ''பரேட்'' அணிமீது விடுதலைப் புலிகள் எறிகணைத் தாக்குதல் நடாத்தியதில் இராணுவ தரப்பிற்கு பாரிய சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

நேற்று முன்தினம் காலை 8.45 மணியளவில் ஒட்டகப்புலம் சிறிலங்கா இராணுவ காவலரணின் உட்புறத்தில் 30ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அணிவகுப்பு ஒன்றினை நடாத்திக்கொண்டிருந்தனர்.

இதன்போது விடுதலைப் புலிகள் இவ் அணி வகுப்பின் மீது எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலால் படையினருக்கு பாரிய இழப்புகள் ஏற்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை பத்தமேனி இராணுவக் காவலரண்கள் மீதும் எறிகணைத் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர். இதன்சேத விபரங்கள் தெரியவரவில்லை.

இதேவேளை புலிகளின் எறிகணைத் தாக்குதலை அடுத்து இராணுவத்தினர் பத்தமேனி பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதலை நடாத்தினர்.

## மேலும் இரண்டு புதிய முகாம்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலும் இரு புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அண்மைக் காலமாக சிறிலங்கா இராணுவத்தினர் பல புதிய முகாம்களை அமைத்து வருவது தெரிந்ததே

நேற்று முன்தினம் உன்னிச்சை 6 ஆம் கட்டைப் பாடசாலையிலும்சரவெட்டிப் பகுதியிலும் இராணுவத்தினர் இரு புதிய முகாமகளை அமைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## லெப். செல்லக்கிளி அம்மான் தூபிக்கு மலரஞ்சலி

1983 ஜூலை மாதம் 23 ஆம் திகதி திருநெல்வேலி தபால்பெட்டிச் சந்தியில் நடைபெற்ற வெற்றிகரமான கரந்தடித் தாக்குதலில் சிறிலங்கா இராணுவத்தினர் 13 பேரை அழித்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். செல்லக்கிளி அம்மான் நினைவுத் தூபியில் இன்று காலை 9 மணிக்கு ஈகைச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்து வீர வணக்கம் செலுத்தப்படும்.

## இரண்டு பொதுமக்கள் படையினரால் கைது

[திருக்கோணமலை]

திருமலைகடற்கரைச்சேனை முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜீவரட்ணம் கோணேஸ்வரன் என்பவர் கடந்த 18 ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு ஜி.பி.எஸ்.முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை கடந்த 19ஆம் திகதி சேனையூர் 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மார்க்கண்டு குமார் (வயது 27) என்ற இளம் குடும்பஸ்தர் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு நாவலடி சந்தி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## பெறுபேறுகள் வெளிவந்தன

தொலைக்கல்வி ஆசிரியர் 1992ஆம் ஆண்டுப் பரீட்சையின் டாடரீதியான பெறுபேறுகள் வெளிவந்துள்ளன. ( 10ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வு இன்றேல் நாடு பிரிவது நிச்சயம்

### முன்னாள் விமானப்படை தளபதி

[கொழும்பு]

சிறிலங்காஇராணுவத்திற்கு வழங்கப்படும் குறைந்தளவு நிதியைக்கொண்டு பலம் வாய்ந்த விடுதலைப் புலிகள் அமைப்பை அடக்கி ஒடுக்குவது முடியாத காரியம் என முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரிகுணதிலகா தெரிவித்துள்ளார்.

பிரச்சினையைத் தீர்க்க அரசியல் தீர்வுகள் மேற்கொள்ளப்படாத வகையில் நாடு துண்டாடப்படுவதைத் தவிர்க்க முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம் விடுதலைப் புலிகளை எந்த இராணுவத்தாலும் தோற்கடிகக முடியாது. அவர்களை மக்களைக் கொண்டே தோற்கடிக்க முடியும் என்றும் ஈ. பி. ஆர். எல். எப் இலிருந்து அண்மையில் பிரிந்து புதிதாக அமைந்த ஈ. பி. ஆர். எல். எப். நாபா பிரிவின் தலைவர் அபுயூசுப் தெரிவித்துள்ளார். இதைத் தாம்தமிழருக்கு புரியவைக்கப் போவதாகவும் அபுயூசுப் தெரிவித்தார்.

# சிங்கள இனவெறியை உலகுக்கு வெளிப்படுத்திய கறுப்பு ஜூலை நாள்

### அரசியல் துறையினர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இணைந்து வாழ விரும்பிய மக்களின் உரிமைகளைப் பறித்து, உரிமை வேண்டி அமைதி வழியில் போராடிய மக்களை ஆயுதமுனையில் நசுக்கி தமிழ் மக்கள் மீது இனவெறித் தாக்குதல்களை நடத்திய சிங்கள ஆட்சியாளர்களை கொடிய இனவெறியர்கள் என உலகுக்கு எடுத்துக் காட்டிய நாட்கள்தான் ஜூலை 25, 27 வெலிக்கடைச் சிறைப் படுகொலைகள்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறையினரால் 1983ஜூலை வெலிக்கடை சிறைப் படுகொலை குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையின் விபரம் வருமாறு:

இலங்கைத்தீவில் இருந்து தமிழினத்தை முற்றாக அழித்தொழித்து இலங்கைத்தீவைச் சிங்கள பௌத்த நாடாக்கும் நோக்கோடு நீண்ட காலமாக செயற்பட்டுவரும் சிங்களப் பேரினவாதிகள் திட்டமிட்ட முறையில் குடியுரிமை பறிப்பு, நிலப்பறிப்பு, மொழியுரிமைப் பறிப்பு, இனவெறித் தாக்குதல்கள் எனப் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் தமிழினப் படுகொலையை நடத்தி வருகின்றனர். இணைப்பாட்சியின் கீழ் இலங்கைத் தீவில் இரு இனத்தவர்களும் இணைந்து வாழலாம் என்றிருந்த ஈழத் தமிழ்மக்களை இனி இணைந்து வாழ முடியாது என்ற நிலைக்கு முற்றாகத் தள்ளிய நிகழ்வுதான் கடந்த 1983 ஜூலை 25, 27ஆம் நாட்களில் கொழும்பு வெலிக்கடைச் சிறையில் நடத்தி முடிக்கப் (10ஆம் பக்கம் பார்க்க)

## பம்பலப்பிட்டி அகதிமுகாம் மூட நடவடிக்கை

கொழும்பில் அமைந்திருந்த விவேகானந்தா மண்டப அகதி முகாம் பலவந்தமாக மூடப்பட்டு அகதிகள் மட்டக்களப்பிற்கு அனுப்பப்பட்டதை தொடர்ந்து பம்பலப்பிட்டி அகதி முகாமையும் மூட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பம்பலப்பிட்டி மாணிக்கப் பிள்ளையார் அகதி முகாமிலுள்ள மக்களை இம்மாத இறுதிக்குள் மட்டக்களப்பு செல்ல தயாராக இருக்கும்படி அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

# நிவாரணமாற்றத்தைஎதிர்த்து மடுவில் மக்கள் பேரணி

(மன்னார்)

வவுனியாமாவட்ட மக்களுக்கான உலர்உணவு விநியோகம் இடமாற்றப்பட்டதைக் கண்டித்து பல ஆயிரக் கணக்கான பொதுமக்கள் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணிஒன்றை நடாத்தினர்.

வவுனியா மாவட்டத்திலிருந்து கடந்தகால சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து வெளியிடங்களில் தங்கியிருந்த 2000 குடும்பங்களுக்கு மடுப் பகுதியிலேயே நிவாரணம் வழங்கப்பட்டுவந்தது. இவர்களுக்கான நிவாரண விநியோகம் எதிர்வரும் 30ஆம் திகதியுடன் மடுவில் வைத்து விநியோகிப்பது நிறுத்தப்படும் எனவும் அடுத்த முதலாம் திகதி முதல் வவுனியா செட்டிகுளம் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிக்குள் வைத்தே நிவாரணம் வழங்கப்படும் எனவும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சின் இந்த அறிவிப்பைக் கண்டித்து வவுனியா செட்டிகுளம் மக்களும் ஏனைய மாவட்ட மக்களும் இணைந்தே இவ் ஆர்ப்பாட்ட பேரணியை நடாத்தினர்.

ஆறாயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் அரசிற்கு எதிரான சுலோகங்களையும்பதா (10ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைக்கு பயந்து கடலில் குதித்த மீனவர்

(வடமராட்சி)

சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்கு அஞ்சி கடலில் குதித்த இரண்டு மீனவ இளைஞர்கள் சுமார் 15 மணித்தியாலங்கள் கடலில் எதிர் நீச்சலிட்டு நேற்று நண்பகல் கரையை வந்தடைந்தனர்.

முனையைச் சேர்ந்த ரூபன், ராசன் என்பவர்கள் நாகர் கோவில் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை எதிர்ப்பட்ட கடற்படையி (10ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### உடன் விற்பனைக்கு

10 நாட்கள் வளர்ச்சியடைந்த புறெயிலர் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி' மானிப்பாய். [5503]

### SPECIAL ENGLISH CLASS

Spoken with grammar and Year 10, 11 English classes are conducted by a leading teacher Contact Director. SHAMROCK Academy, Chundikuly, Jaffna. (5447)

### திருத்திக் கொடுக்கப்படும்

தமிழ் ஆங்கில தட்டச்சு இயந்திரம், பிரதிபண்ணும் இயந்திரம் சிறந்த தொழில் நுட பவல்லுநர்களால்குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும். றொச்லூட் GR. மருதலிங்கம் 8/1, E அம்மன் வீதி, கந்தர் மடம் யாழ்ப்பாணம். (5211)

### தேவை

சுத்தமான வேப்பம் விதையும், வேப்பம் பழக்கோதும் வாங்கப்படும். தொடர்பு- மில்க்வைற். (சி-7045)

### 38ஆவது ஆண்டு நிறைவுவிழா

[நெல்லியடி]

புலோலி தெற்கு முருகையா கோவிலடி அறிவகம் சனசமூக நிலைய 38 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், விளையாட்டுப் போட்டியும் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு திரு. இ. சத்தியேந்திரா தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினர்களாக, யாழ். மாவட்ட இலங்கை வங்கி செயற்பாடுகள் முகாமையாளர் திரு. கே. பாலசுப்பிரமணியம் கரவெட்டி பிரதேச செயலர் திரு எஸ் ஸ்ரீநிவாசன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (30)

### நினைவு விழா

நவாலியூர் சோமசுந்தரப் புலவரது நினைவுநாளையொட்டி கடந் வாரம் நவாலி மகாவித்தியாலயத்தில் விழா எடுக்கப்பட்டது.

நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் விழாவிற்கு மகா வித்தியாலய அதிபர் திருமதி எஸ். விசுவலிங்கம் தலைமை தாங்கி தங்கத்தாத்தாவின் புகழை எடுத்துரைத்தார்.

### அரை இறுதிப் போட்டிககு தெரிவு

யாழ். கோட்ட மட்ட பாடசாலைகளுககிடையேயான மென்பந்து கிரிக்கெற் சுற்றுப் போட்டியின் முதலாவது சுற்று 21-07-1993 அன்று ஆரம்பமானது. இதில் யாழ்/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையை எதிர்த்து யா/வண்ணை நாவலர் வித்தியாலயம் மோதயது. முதலில் துடுப்பெடுத்தாடிய மகேஸ்வரி வித்தயாசாலை 9 விககற்றுகளை இழந்து 73 ஒட்டங்களையும். வண்ணை நாவலர் சகலவிக்கற்றுகளையும் இழந்து 36 ஓட்டங்களையும் பெற்றது. மட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர்களைக் கொண்ட இப்போட்டியில் மகேஸ்வரி வித்தியாசாலை அரை இறுதிப் போட்டிக்குத் தெரிவாகி26 07 1993 அன்று யா/மத்திய கல்லூரியோடு மோதவுள்ளது.

நாளைமுதல் நல்லூரில் சுவைதேடும்

## உணவுப் பிரியர்களை ஜெசித்தாரா அழைக்கிறது

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா தனது சேவையை நல்லூரில் விஸ்தரிக்கின்றது.

நல்லைக்கந்தன் எதிரே எதிர்வரும் 24ஆம்திகதி ஆடி 1993ஆம் ஆண்டு

### சுவைச் சோலையில்

608/2. பருத்தித்துறை வீதி, (நல்லூர் கந்தன் முன்பாக) தனது ஏகோபித்த வாடிக்கையாளர்களின் நலன்கருதி சேவையை ஆரம்பிக்கின்றது.

நீங்களும் முன்கூட்டியே பதிவு செய்து ஏமாற்றத்தை தவிர்க்கவும்.

மரக்கறி / விரதச்சாப்பாடு
பார்சல் ரூபா 25/- மட்டுமே

பகல் 12.00 முதல் பெற்றுக்கொள்ளலாம்.

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா
சுண்டிக்குளி மகளிர் முன் ஒழுங்கை, சுண்டிக்குளி.

ஜெசித்தாரா புதுயுகத்தில் புது உருவம்

(சி/7062)

சகல அரசாங்க குடும்பநல சேவை

## உத்தியோகத்தர் கவனத்திற்கு

எமது 19-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் 25.7.93 அன்று தவிர்க்கமுடியாத காரணத்தினால் யாழ்/வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறமாட்டாது என்பதையும், அன்றைபதினம் யாழ். நாவலர் பாடசாலையில் (மனோகராத் தியேட்டர் அருகாமை) நடைபெறும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

திருமதி க. அல்பிரட்
கௌரவ செயலாளர்
இணுவில்.

(5506)

## ஒரு தசாப்தத்தின் நிறைவில் ஒரு கணம்.........



### லெப். செல்லக்கிளி அம்மான்

[சதாசிவம் செல்வநாயகம்]

மண்ணில்: 21-06-1953 மண்ணிற்காக: 23-07-1983

"இலட்சிய வேங்கைகள் இறப்பதுமில்லை
விடுதலைப் புலிகள் வீழ்வதுமில்லை"

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலிகிழக்கு.
(5507)

வாலையம்மன் சனசமூக
நிலையத்தினரும்
மாதர் சங்கத்தினரும்

யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

(கரும்புலிகள் நினைவாக)

போராளிக் கலைஞர்கள் ஒருங்கிணைந்து
விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம்
தயாரித்து வழங்கும்

## "தாயகக் கனவு"

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6.00 மணி

[சி6959]

## நினைவு கூருகின்றோம்... 1993-07-23

1983ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - திருநெல்வேலியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித்தாககுதலின் போது வீரச்சாவெய்திய.

**லெப் செல்லக்கிளி அம்மான்** (சதாசிவம் செல்வநாயகம்-திருநெல்வேலிகிழக்கு-யாழ்)

1989ஆம் ஆண்டு கோண்டாவிலில் தேசவிரோத சக்திகளினால் சுடடுககொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**கந்தையா வேலாயுதகுமார்** (வேலாயுதகுமார்வீதி, உடையார்வளவு-சுன்னாகம்)

கோண்டாவில் ரயில் நிலையத்திற்குச் சமீபமாக தேசவிரோதசக்திகளினால் சுடடுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான யாழ்-மத்தியகல்லூரி வர்த்தகப்பிரிவு மாணவன்.

**மகாலிங்கம் மகேஸ்வரன்** (நீர்வேலி)

சணடிலிப்பாயில தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1990ஆம் ஆண்டு வீரசசாவெய்திய,

**தசரதன்** (——— திருமலை)

யாழ்-காங்கேசன்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**பிரசன்னா** (புதியாக்குட்டி தயாபரன்-புத்தூர் கிழக்கு-யாழ்)

யாழ்—கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**அமுது** (ஐயாசாமி கிருஷ்ணமூர்த்தி-சுப்பர்மடம்-பருத்தித்துறை)

முரசுமோட்டை - 2-ம் கட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின்போது வீரச்சாவெய்திய,

**சரவணன்** [பாலிப்பொடி சசிகரன்-கோரக்கல்லிமடு·மட்டு]

**மனோஜ்** [சின்னத்தம்பி தயாபரன்-கிரான்சி, பூநகரி-மன்னார்]

**வெஸ்லி** (மகாலிங்கம் புவனேந்திரன்-கற்குழி,சாவகச்சேரி--யாழ்)

**ரேணு** (சாம்பசிவம் கந்தசாமி)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மயிலம்பாவெளியைச் சேர்ந்த தமிழ்ப்பெண்.

வவுனியா-செட்டிக்குளம் பகுதியில் சிறிலங்காப்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் சடலமாக மீட்கப்பட்ட தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவில்மேற்கொள்ளப்பட்ட ஆ.க.வெ. நடவடிக்கையின்போது புல்லாவெளியிலிருந்து ஆனையிறவு நோக்கி முன்னேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**மனோ** [தியாகராசா மகேந்திரம்-பனங்காடு, அக்கரைப்பற்று-அம்பாறை)

**லெப்.ஜெயா** (செல்லையா நடராசா - காயங்காடு, செங்கலடி-மட்டு)

**கைலன்** (இராமலிங்கம் இராஜி-களுவாஞ்சிக்குடி-மட்டு)

**லெப்.சிவா** (இராசப்பு அன்ரனி அமலநேசன்-நிலாவெளி-திருமலை)

**கப்டன் அரசன்** (சோமசேகரம் யோகேந்திரன்-அரியாலை--யாழ்)

**கப்டன் பாண்டியன் 'புறூஸ்லி** (துரைசிங்கம் கிருஷ்ணகுமார் -வடலியடைப்பு, பண்டத்தரிப்பு)

**அறிவொளி** (சிறிபத்மநாதன் சத்தியசீலன்-விதானையார் வீதி, சுண்டுக்குளி-யாழ்)

**பட்சன்** [சீனியர் உதயராசா-புன்னாலைக்கட்டுவன் தெற்கு-யாழ்]

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவததினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது படுகொலை செய்யப்பட்ட கூலித்தொழிலாளியான செங்கலடி - 2ஐச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

### தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-7060)

# தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு குறுக்குவழியில் ஒரு திட்டம்

தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு அரசாங்கம் மூன்று மாதங்களுக்குள் தீர்வு கண்டுவிடும் என ஜனாதிபதி விஜயதுங்கா பகிரங்கமாக பிரகடனம் செய்திருக்கிறார். இதே தொனியில் பிரதமர் ரணிலும் அறிக்கைகளை வெளியிடுகிறார்.

நான்கு தசாப்தங்களாக முடிவில்லாமல் இழுபட்டுவரும் ஒரு சிக்கலான இனப்பிரச்சினைக்கு மூன்று மாதங்களுக்குள் எப்படி தீர்வை காண்பது? வட கிழக்கில் யுத்தம் தொடர்கிறது. விடுதலைப் புலிகளுடன் சமாதானம் செய்துகொள்ள அரசாங்கம் தயாராக இல்லை. புலிகளின் சமாதான சமிக்ஞைகளையும் அரசாங்கம் நிராகரித்து வருகிறது. இராணுவத் தீர்வை முன்னெடுப்பதிலேயே முனைந்து வருகிறது. இப்படியான போர்ச் சூழலில் திடீரென ஒரு தீர்வைக் கொண்டுவருவது எப்படி? தமிழரின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கும் மூடுவிழா நடக்கப்போகிறது. தெரிவுக் குழு மூலமே தீர்வு வைக்கப்படும் என நீண்டகாலமாக அரசு கூறிவந்திருக்கிறது. அந்தத் தெரிவுக் குழு இப்பொழுது செயலிழந்து செத்துக் கொண்டிருக்கிறது. இந்த சூழ்நிலையில் அரசியல் தீர்வு எங்கிருந்து, எப்படி வரப் போகிறது? நிலைமை எப்படி இருந்தாலும் அரசாங்கத்திடம் ஒரு இடைக்காலத் தீர்வுத் திட்டம் இருப்பதாக விசயமறிந்த அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

பதின்மூன்றாவது அரசியல் சட்ட திருத்தத்தை செயற்படுத்தி மீண்டும் வட கிழக்கு மாகாண சபையை இயங்க வைப்பது குறித்து அரசாங்க உயர்மட்டத்தில் தீவிர பரிசீலனை நடப்பதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள். இதில் உண்மை இருக்கலாம். இன்றைய சிக்கலான அரசியல்-இராணுவ சூழ்நிலையில், ஒரு குறுக்கு வழியில் தமிழர் பிரச்சினையை அணுகுவதற்கு அரசாங்கம் இப்படியாக ஒரு தந்திரோபாயத்தை கையாளலாம். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாக வடகிழக்கு தற்காலிகமாக இணைந்த மாகாணசபைத் திட்டம் உருவாக்கப்பட்டது. தமிழர் மாநிலத்திற்கு மிகக் குறைவான ஆட்சியதிகாரத்தையும், சிங்கள மத்திய அரசுக்கு ஏகபோக அதிகாரங்களையும் வழங்குவதாக இத்திட்டம் அமைந்ததால் புலிகள் இயக்கம் இதனை ஏற்க மறுத்தது. இத்திட்டத்தை ஆயுத முனையில் தமிழ் மக்கள் மீது இந்தியா திணித்துவிட முனைந்ததால் ஒரு பெரிய யுத்தமே ஏற்பட்டது. எனினும் போரின் மத்தியிலும் இத் திட்டத்தை செயற்படுத்த இந்திய அரசு முனைந்தது. இந்தியாவின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய ஜே. ஆர். அரசும் முன்வந்தது. இதன் பெறுபேறாக 13வது அரசியல் யாப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டு மாகாணசபைத் திட்டம் சட்டவாக்கம் பெற்றது. தேர்தல் என்று ஒரு போலி நாடகம் அரங்கேற்றப்பட்டு, இந்தியாவின் அடிவருடியான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு ஆட்சியதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. வரதராஜப்பெருமாள் சிம்மாசனம் ஏறினார். ஆயினும் வடகிழக்கில் தொடர்ந்த யுத்தமும், விடுதலைப் புலிகளின் ராஜதந்திர காய் நகர்த்தல்களும் காரணமாக வடகிழக்கு மாகாண நிர்வாகம் செயலிழந்து போயிற்று. இறுதியில் இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்துடன் பெருமாளின் ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டது.

இவையெல்லாம் பிரேமதாசா சகாப்தத்தில் நடந்து முடிந்த நிகழ்வுகள். இப்பொழுது ஆட்சிபீடம் ஏறியிருக்கும் புதிய அரச நிர்வாகத்தில் இந்திய ஆதரவாளர்களின் ஆதிக்கம் மேலோங்கி வருகிறது. அரசியலில் ஒதுங்கியிருந்த ஜே ஆர். இப்பொழுது விஜயதுங்கா அரசுக்கு மறைமுக ஆலோசகராக செயற்பட்டுவருகிறார். இந்தியாவின் முக்கியத்துவத்தையும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் தேவையையும் வலியுறுத்தி வருகிறார். இந்திய-இலங்கை ஒபபந்தம்செத்துப்போகவில்லை என்றும், 13வது திருத்தமாக அரசியல் அமைப்பில் அது உயிரோடு இருப்பதாகவும் நினைவுபடுத்தி வருகிறார்.

13வது திருத்தத்தை செயற்படுத்தி, வடகிழக்கு மாகாண சபையை இயங்க வைக்க வேண்டும் என்றும் தமிழர் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதுதான் ஒரேவழி என்பதும் கிழட்டு நரியின் யோசனை. இந்தியாவின் அரூப கரங்களும் இதற்குப் பின்னால் செயற்படலாமென நம்புவதற்கு இடமுண்டு. ஏனென்றால், ஒற்றையாட்சியின்கீழ் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படுவதும் இந்திய-இலங்கை ஒப்பந்தம் புத்துயிர் பெறுவதும் இந்திய பூகோள-அரசியல் நலன்களைப் பேணும் என்பதால் இந்திய அரசு இத் திட்டத்தை ஆதரிக்கலாம். கோடானு கோடி பணத்தை செலவழித்தது. ஒருபெரிய யுத்தம் ஒன்றை நடத்தி, எத்தனையோ ராஜதந்திர சதுரங்க ஆட்டங்களை நிகழ்த்தி, ஒப்பந்தத்தை காப்பாற்ற முடியாது போன இந்தியாவிற்கு, எந்தவிதமான சிக்கல்களுமின்றி மீண்டும் இந்த ஒப்பந்தம் செயலாக்கம் பெறுவது ராஜதந்திர அதிர்ஷ்டம் என்றுதான் சொல்லலாம்.

**- சாணக்கியன் -**

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் பரிந்துரைக்கப்பட்ட மாகாணசபைத் திட்டத்திற்கு மாற்றுத்திட்டமாக ஒரு தீர்வைக் காண்பதற்கு பிரேமதாசா முயன்றார். இந்த நோக்கத்தில் சர்வகட்சி மாநாட்டையும், பின்னர் பாராளுமன்ற தெரிவுக் குழுவையும் உருவாக்கினார். தனி மாகாண சமஷ்டி என்ற போர்வையில் தமிழர் தாயகத்தை கூறுபோட அவர் மேற்கொண்ட முயற்சிகள்பயனளிக்கவில்லை. இதற்கு உள் - முரண்பாடு காரணமாகதெரிவுக்குழுபிளவுபட்டு உடைந்தது.

தெரிவுக் குழுமூலம் எதையுமே உருப்படியாக சாதிக்க முடியாது என விஜயதுங்கா அரசு ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது போலத் தெரிகிறது. அத்துடன் பிரேமதாசாவின் தனிப்பட்ட படைப்பாக உருவாக்கப்பட்ட அமைப்புகளை கலைத்துவிடுவதிலும் புதிய அரசு தீவிர அக்கறை காட்டுகிறது. அதுமட்டுமன்றி, 13 ஆவது திருத்தத்தை செயற்படுத்தி வடகிழக்கு மாகாண சபையை இயங்கச்செய்ய அரசாங்கம் உண்மையாகவே விரும்பினால் தெரிவுக்குழுவை தொடர்ந்து இயக்குவதில் அர்த்தமிலலை.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தத்தை தொடர்ந்து நடத்திக்கொண்டு, வட கிழக்கில் தேர்தலை நடத்தாது, ஒரு தற்காலிக தீர்வாக மாகாண சபையை இயக்குவதற்கு அரசு முயற்சி எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. சனநாயகத்தை தழுவிக்கொண்டதாக சொல்லப்படும் தமிழ்க் குழுக்களை வைத்துக்கொண்டு, இந்திய பாணியில் காரியத்தை சாதித்துவிட அரசு முனையலாம். நீண்டகாலமாக அரசியல் வெறுமையில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் தமிழ்க் குழுக்கள் இந்த திட்டத்தை நிச்சயம் வரவேற்கலாம். புலிகளை ஓரம்கட்டிவிட்டு அதிகாரத்தை பகிர்ந்துகொள்ளலாம் என்ற நப்பாசையில் அரசாங்கத்தின் இந்த அரசியல் சூதாட்டத்தில் பங்குகொள்ள தமிழ்க் குழுக்கள் முன்வரலாம். ஆனால் இதில் ஒரு பெரிய சிககல் இருககிறது. யார் யாருக்கு, எந்த அளவில், அதிகாரத்தை பகிர்ந்துகொடுப்பது என்பதில் பெரிய முரண்பாடு எழுவது சாத்தியம்.

தமிழ்க் குழுக்களில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அன்று தொடக்கம் இன்றுவரை இந்தியாவின் விசுவாசியாக செயற்பட்டு வருகிறது ஈ. பி. டி. பி, புளொட் போன்றன சிங்கள அரசின் அடிவருடிகளாக செயற்படுகினறன. இந்த ரீதியில் நிர்வாக அதிகாரத்தை கைப்பற்றும் விடயத்தில் தமிழ்க் குழுக்கள் மத்தியில் போட்டியும், குத்துவெட்டுகளும் எழுவதை தவிர்க்க முடியாது. இந்திய அரசு ஈ.பி ஆர்.எல். எவ் ற்கு சார்பாகவே நிற்கும். பழைய வரலாற்றை சுட்டிக்காட்டி வரதராஜப் பெருமாளுக்கு மீண்டும் முடி சூட்ட வேண்டுமென இந்திய அரசு வற்புறுத்தலாம். ஆனால் மற்றைய குழுக்கள் இதனை ஏற்றுக் கொள்ளுமா என்பது சந்தேகமே. இது ஒருபுறமிருக்க, ஈ. பி. ஆர். எல். எவ். மத்தியிலும் பிளவுகளும், உடைவுகளும் ஏற்பட்டு வருகின்றன. நீணடகாலமாக அரசியல் அஞ்ஞாத வாசத்திலிருந்து, இந்தியாவில் சுகபோகங்களை அனுபவித்து வந்த பெருமாளை மீண்டும் தலைவராக ஏற்றுக் கொள்ள ஈ பியின் இன்றைய தலைமை இணங்குமா என்பதும் ஒரு பெரிய கேள்விக்குறி.

எது எப்படி இருந்தாலும், இந்திய - சிங்கள அரசுகளின் கூட்டுச் சதியாக இத் திட்டம் செயலாக்கம் பெற்றாலும், விடுதலைப் புலிகள் இயக்கத்தை அந்நியப்படுத்திவிட்டு இந்த இமாலய காரியத்தை சாதிக்க முடியுமா என்பது தான் நடைமுறை அரசியலைப் புரிந்துகொண்டவர்கள் விடுக்கும் கேள்வி. ஏற்கனவே, இப்படியான ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தியதில் இந்தியா தோல்வி கண்டது. வடகிழக்கில் ஒரு லட்சம் துருப்புகளை குவித்துவைத்தும் கூட இந்தியாவால் மாகாண சபைத் திட்டத்தை செயற்படுத்த முடியவில்லை. அப்படியிருக்கும்பொழுது மீண்டும் இந்த விஷப் பரீட்சையில் இறங்கி இந்திய, சிறிலங்கா அரசுகள் முகத்தில் கரிபூசிக் கொள்ளலாம் என அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

தமிழீழ மக்களையும், அம் மக்களின் பிரதிநிதிகளான புலிகள் இயக்கத்தையும் உதாசீனம் செய்து ஒதுக்கிவிட்டு தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்ற எதார்த்த உண்மையை சிங்களப் பேரினவாதமும், இந்திய பிராமணியமும் இன்னமும் உணர்ந்துகொள்ளவில்லை என்பது வேதனைக்குரிய விடயம்.

# தலை வளைகாப்பு தொலைக்காட்சி மின்னியல் தொழில் நுட்பத்தில் புதிய வடிவம்

சைக்கிள் சவாரி அல்லது உலாவின்போது நம்மில் பலர் தலையில் ஒரு வளைகாப்பு ஒலி பண்ணி சாதனத்தை அணிந்து சென்று இசையை ரசித்து செல்வார்கள் இது வாக்மன் [Walkman] என அழைக்கப்படுகிறது. இந்த இசையுடன் காட்சிப்புலனையும் தரக்கூடிய சின்னஞ்சிறு தொலைக்காட்சி சாதனம் ஒன்றை விஞ்ஞான நிபுணர்கள் இப்போது உருவாக்கியுள்ளனர்.

வாக்மன் கருவியை ஒத்த இந்த டி. வி. சாதனத்தைத் தலைவளைகாப்பு தொலைக் காட்சிசாதனம் (Goggles Vox) என அழைக்கின்றனர். இந்த நவீன தொலைக்காட்சி சாதனம் ஒரு வருடத்திற்குள் விற்பனைக்கு வரும். இதன்விலை கிட்டத்தட்ட 500 டொலராக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது.

வில்லியம் ஜோன்சன் என்ற பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞான சாதன கண்டுபிடிப்பாளரினால் இதுஉருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தொலைக்காட்சிச் சாதனத் திரை 2.5 அங்குல மூலை விட்டம் கொண்ட சிறிய திரை.

இந்த சாதனம் இரண்டு திரைகளைக் கொண்டிருக்கின்றது. இத்திரைகள் திரவப்படிகக் காட்சித்திரைகள் [Leqpiu Crystal Display] என்று அழைக்கப்படுகிறது. இது சுருக்கமாக L C D எனப்படுகிறது. இரு அடுக்குகளைக் கொண்டிருக்கும் L C D தொலைக் காட்சித் திரை இந்த வளைகாப்பு டி. வி. யை அணிந்திருப்பவரின் கண்ணில் இருந்து ஒரு சில அங்குல தூரத்தில் இருக்கும். திரை சிறிதானாலும் அதன் சிறிய இரட்டை விம்பங்கள் பெரிய திரையில் காட்சியைப் பார்க்கும் உணர்வையும், திருப்தியையும் தருகின்றது.

இந்த நவீன தொலைக் காட்சி சாதனத்தின் திரை Pixel எனப்படும் ஆயிரம் நுண் உருவப்பட அலகுகளை உள்ளடககியுள்ளது. இவற்றிற்கும் மேலாக திரையின் மேற்பரப்பில் மிக நுண்ணிய வில்லைகள் பதிக்கப்பட்டிருக்கின்றன. இவை தொலைக்காட்சி விம்பங்களைஉருப்பெருக்கம் செய்து தெளிவான காட்சியாக பெருகூட்டுகின்றன. ஜப்பானிய சோனி (Sony) மின்னியல் சாதன உற்பத்திநிறுவனம் தலைவளைகாப்பு டி வி. ஒன்றைவடிவமைத்துள்ளது. இதற்கு 'விசோர்றோன்' எனப்பெயரிடப்பட்டுள்ளது. இதில் இரண்டு கண்களுக்கும் தனித்தனியாக L C D காட்சித்திரைகள் உள்ளன. திரையின் அகலம் 0 7 அங்குலம் தான் இந்த டி.வி. சாதனம் ஜப்பானிய விமான சேவையில் பயணம் செய்வோரை இது குதூகலமாக வைத்திருக்க இவ் வருடமே பாவனைக்கு வருகிறது. கண்டுபிடிப்புகள் அலாதியானது தான் எமது பண முடிப்புகள் இவற்றை ஈடுகட்டுமா?

## யாழ். மாவட்ட மக்களின்

# உணவுத் தேவையும், விநியோகமும்

**1990** ஆம் ஆண்டு நடுப்பகுதிக்கு முன்பு யாழ்ப்பாண மாவட்ட மக்களின் தேவைகளை நிறைவேற்றுவது தொடர்பான சேவைகள் போன்றவற்றில் பலதரப்பட்ட தாபனங்கள், திணைக்களங்கள் தங்கள் பங்களிப்பைச் செய்து வந்தன. இவ்வாறான சேவைகள் தனியுரிமை வியாபார நிறுவனங்களாயும் நிறைவேற்றப்பட்டன. இதற்கு அப்பாலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல இடங்களில் உணவு உற்பத்திச் செயற்பாடு நடைபெற்றது. இலாபமீட்டும் நோக்கத்துடன் மட்டுமல்லாது திறமையான சேவைகளையும் அளிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அரச தாபனங்களும், திணைக்களங்களும் செயலாற்றி வந்தன. ஓரிரு தனியுரிமை வியாபார முயற்சிகள் இதற்கு விதிவிலக்காக இருந்திருக்கலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளோரின் நுகர்ச்சிப் பண்டங்களில் பிரதான தேவைகளான உணவு, உடை, எரிபொருள் போன்றவற்றைக் கடந்த காலங்களில் கொழும்பிலிருந்து பெறுவதில் பின் வரும் அரச மற்றும் அரச சார்பு நிறுவனங்கள் உச்ச அளவு நிலையில் தமது பங்களிப்பைச் செய்து வந்தன. அவை உணவுத் திணைக்களம், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் [சி டப்ளியூ.ஈ], கமத்தொழில் திணைக்களம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் [மொத்தம்:23] சலுசலா, லக்சலா, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம், சந்தைப்படுத்தும் சபை.

மேற்கூறிய அமைப்புக்களின் முயற்சியால் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒரு வருட காலத்தேவைக்கான பொருள்கள் பின்வரும் வகை தொகையில் களஞ்சியப் படுத்தப்பட்டுப் பகிர்ந்தளிக்கப்பட்டன:

அரிசி - 82,000 மெ.தொன்
மா - 29,700 மெ. தொன்
சீனி - 18,150 மெ தொன்
தானிய வகை - 12,375 மெ. தொன்
பால் வகைகள் - 60 லட்சம் பக்கட்கள்
மண்ணெண்ணெய் - 86,400 பரல்கள்
விவசாய உரம் - 50,000 மெ. தொன்

தனியுரிமை வியாபார அமைப்புகளும் தமது வியாபார முயற்சிகளின் அடிப்படையில் பெறப்பட்ட உணவுப்பொருள்களும் இதில் அடங்கும். இவற்றுக்கு மேலதிகமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் உப உணவுச் செய்கையும் மேற்கொள்ளப்பட்டது.

உணவுத் தேவைப் பொருள்களான அரிசி, மா, சீனி ஆகியவை உணவுத் திணைக்களம் கொள்வனவு செய்த அத்தியாவசிய நுகர்ச்சிப் பொருள்களாகும். இவை உணவுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருந்த காரணத்தினால், வருடத்தில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் புகையிரத மார்க்கமாகவும், தரைமார்க்கமாகவும் பெற்றுக் களஞ்சியப் படுத்தப்பட்டன இதற்கான களஞ்சியங்கள் நாவற்குழி, யாழ்ப்பாணம், குருநகர், கோண்டாவில், காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய பிரதான மையங்களில் அமைந்திருந்தன.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் [C. W. E.] தானிய வகைகள், பால்மா, துணி போன்ற பொருள்களைக் கொழும்பில் கொள்வனவு செய்து யாழ்ப்பாணத்தில் களஞ்சியப்படுத்தியது.

எரிபொருளுடன் தொடர்புடைய சேவையைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டது. பெற்றோல் டீசல், மண்ணெண்ணெய் ஆகியவை தருவிக்கப்பட்டு எண்ணெய்க் கிடங்குகள் அல்லது கொள்கலன்களில் களஞ்சியப் படுத்தப்பட்டன சில சமயங்களில் ப. நோ. கூ. சங்கங்களும் எரிபொருள் வியாபார முயற்சியில் ஈடுபட்டன.

விவசாயத் திணைக்களமும் கமத்தொழில்சேவை நிலையங்களும் உரவகைகளைத் தருவித்து பயிர்ச்செய்கைக்கு ஏற்ற தவணைகளில் பங்கீடு செய்தன.

> **யாழ் குடாநாட்டில் இரண்டு லட்சத்து அறுபதாயிரம் பேர் வேலையின்றியும், தொழில் வாய்ப்பை இழந்தும் இருக்கிறார்கள் நாளாந்தக் கூலிவேலை செய்யும் இரண்டு லட்சத்துப் பத்தாயிரம் பேர் வேலையின்றி இருக்கிறார்கள். இவர்களால் அதிக விலைகொடுத்துப் பொருள்களை வாங்க முடியாது. ஆகவே இவர்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்க வேண்டியுள்ளது.**

### உணவு விநியோகமுறையின் தற்போதைய நிலை

தமிழ் மக்களின் சமூக பொருளாதார வாழ்க்கையானது இன்று முன்னெப்போதும் ஏற்பட்டிராத நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. இந்தச் சூழ்நிலையில் யாழ் குடாநாட்டில் 8 40,000 மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில் சுமார் 2,40,000 பேர் இடம் பெயர்ந்து அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ள முகாம்களிலும் அவை தவிர உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வருகிறார்கள்.

1990 ஜூன் 10ஆம் திகதிக்குப் பின்பு அரசின் பொருளாதாரத் தடையினாலும் இராணுவ நடவடிக்கைகளினாலும் அரச திணைக்களங்களும், தாபனங்களும் செயலிழந்த காரணத்தால் குடாநாட்டு மக்களின் பொதுவான உணவுப் பொருள்கள் இடர்ப்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் ப.நோ.கூ. சங்கங்கள் அத்தியாவசியப் பொருள்களைத் தருவித்து, விநியோகித்து வந்தன. பல சிரமங்கள் மத்தியிலும், ப. நோ கூ. சங்கங்கள் இப்பணியைச் செய்ய வேண்டி இருந்தது இந்தப் பின்னணியில் இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த மக்களின் நலத்தைப் பேணுவதற்காக அரசினால் ஆரம்பிக்கப்பட்ட புனர்வாழ்வு அமைச்சின் புனர்வாழ்வுத் திணைக்களம் புனர்வாழ்வு வேலைகளுடன் உணவுத் திணைக்களம் செய்து வந்த உணவு விநியோக வேலைகளையும் மேற்கொண்டு வருகிறது ஆனால் உணவு களஞ்சியப்படுத்தும் வேலையைப் புனர்வாழ்வுத் திணைக்களம் நிர்வகிப்பதில்லை.

மேலும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிதியை அதிகரித்துக் கொள்வதற்காக வங்கிக் கடனையும் பெற்றுக் கொள்ளலாம். இதனடிப்படையில் தேவைகளுக்கு ஏற்ற கொள்வனவு சக்திக்கு உதவியாக வங்கிக் கடனும் வழங்கப்பட்டது மக்கள் வங்கி இந்த நுகர்ச்சிக் கடனை சட்டியைக் கைவிட்டது போல் இப்போது கைவிட்டுள்ளது அது இப்போது நடைமுறையில் இல்லை. இதனால் சங்கங்கள் பொருளாதார வகையில் வலுவிழந்த நிலையில் உள்ளன.

யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தொழிற்பாடுகள் கீழே தரப்படுகின்றன:

- ரொக்க விற்பனை
- இலவச வறுமை நிவாரணம்
- இடம்பெயர்ந்த மக்கள் நிவாரணம்
- மாணவ மதிய உணவு முத்திரை
- மீனவர் உணவு முத்திரை
- மேசன் தச்சன் நிவாரணம்

யாழ் குடாநாட்டிலுள்ள பல நோ. கூ. சங்கங்களின் செயற்பாட்டைக் கவனித்தால் மேற்படி நிவாரணப் பொருள்களுக்காக ப. நோ. கூ. சங்கங்கள் அரசுக்கு முற்பணமாகப் பெருமதியில் அரைப்பங்கு பணத்தை செலுத்த வேண்டியுள்ளது. சங்கங்களின் உணவு விநியோக விடயத்திலும் பணத்தையே விசேட அம்சமாக அரசு கருதுகிறது ஆனால், இதற்கான முழுமையான கொடுப்பனவு 2 அல்லது 3 மாதங்கள் தாழ்த்தியே செயலகத்தினால் வழங்கப்படுகிறது. இந்த இடைப்பட்ட காலங்களில் மேலதிக செலவுகளுக்கான பணத்தையும், கொள்வனவுச் செலவினங்களையும் ப நோ. கூ, சங்கங்கள் தாம் வங்கியில் முதலீடு செய்த அல்லது கையிருப்புப் பணத்துக்கும் எதிராகப் பெற்று வியாபார நடவடிக்கைகளைக் கவனித்து வருகின்றன.

### விலை நிர்ணயம்:

நியாயமான விலையில் பண்டங்களையும், சேவைகளையும் மக்களுக்கு வழங்குவதே கூட்டுறவு அமைப்பின் பிரதான நோக்கமாகும். ஆனால் பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை காரணமாக யாழ் குடாநாட்டில் கூட்டுறவு இயக்கத்தின் பிரதான நோக்கங்களைச் செயற்படுத்த முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளதாக உள்ளன.

யாழ். மாவட்டத்திற்கு இரு மார்க்கமாக உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்கள் தருவிக்கப்படுகின்றன. ஒன்று கப்பல்மூலம், மற்றது கிளாலி கடல் நீரேரி ஊடாக இரு மார்க்கமாக வருகின்ற பொருள்களுக்கு இரு வேறுபட்ட விலைகளை நிர்ணயிக்க வேண்டியுள்ளது. காரணம், போக்குவரத்து கூலி. அரசினால் கப்பல்மூலம் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருள்கள் நிவாரண தேவைகளுக்கு உபயோகித்து மேலதிகமானவற்றை ரொக்க விற்பனைக்கு வழங்கப்படுகின்றது. இவை குடும்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு பூரணமாகக் கிடைப்பதில்லை யாழ் மாவட்டத்தின் முழுத் தேவைகளின் 20 வீதம் கூட பூர்த்தி செய்யக்கூடியதாகவில்லை. கூட்டுறவுச்சங்கங்கள் தனியார் துறையினர், கொழும்பு மற்றும் பிற மாவட்டங்களிலிருந்து அத்தியாவசிய பொருள்களை உடனுக்குடன்கொண்டு வரமுடியாதிருக்கின்றது இதனால் பொருள்களின் விலை 50வீதம்முதல் 500வீதம்வரை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும் பல சந்தர்ப்பங்களில் ஒரே ரகத்தைச் சேர்ந்த பொருள்களே கொழும்பிலிருந்து தரப்படுகின்றன மக்கள் ஒரு பொருளுக்குப் பிரதியீடாக மற்றொரு பொருளை நுகரும் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக லைலன்ட் பால்மாவைக் குறிப்பிடலாம். மற்றும்படி மனிதப் பாவனைக்கு உதவாத பொருள்கள் (உ.ம்: சர்க்கரை, பூடு) சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. தரமான மற்றும் பிரதியீட்டுப் பொருள்களை கொண்டுவரும் முயற்சிகளுக்கு இயன்ற அளவு கைகொடுப்பது உணவு விநியோகத்தில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் கடமை.

தொழிற்சாலைகள், தொழில் வழங்கும் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. இதனால் இரண்டு லட்சத்து அறுபதினாயிரம் பேர் வேலையின்றியும், தொழில் வாய்ப்பை இழந்தும் இருக்கிறார்கள். நாளாந்த கூலி வேலை செய்யும் இரண்டு லட்சத்து பத்தாயிரம் பேர் வேலையின்றி இருக்கிறார்கள். இவர்களால் அதிக விலை கொடுத்து மேற்படி பொருள்களைவாங்கமுடியாது பட்டினிச்சாவை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

சர்வதேச மட்டத்திலும் சாதாரண நடைமுறையிலும், ஒரு நாட்டின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் பொருள்களின் தட்டுப்பாட்டை நீக்கும் நோக்குடன் அரச களஞ்சியங்கள் இயங்கி வருவது வழமை. இவை எமது மாவட்டத்திற்கு விதிவிலக்காகவுள்ளது. இவை சீரிய நடைமுறையில் பாதுகாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுமாயின் காலத்திற்குக் காலம் ஏற்படுகின்ற பொருள்களின் தட்டுப்பாட்டையும், விலைவாசியையும், கறுப்புச்சந்தை வியாபாரத்தையும் கட்டுப்படுத்தலாம் மாவட்டத்தின் ஒரு வருடத் தேவைகளின் ½ பங்கு உணவுப் பொருள்கள் களஞ்சியப்படுத்தப்படல் வேண்டும். அத்துடன் துறைசார்ந்த நிறுவனங்கள். திணைக்களங்கள் தமது தேவையையும் தொகையையும் அறிந்து அவற்றை பெற்றுக்கொள்ள வேண்டும் ஆனால் திணைக்களங்களின் கொள்வனவுச் சக்திக்கு ஏற்ற நிதிஒதுக்கீடுகள் கிடைக்காத நிலைமை தொடருமானால், யாழ். மாவட்டத்தின் புனர்வாழ்வுப் பொறுப்பையேற்கும் அரச அதிபரே ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

-மதன்

வேம்பின் ஆதாரம்

மலசலகூடம்
குளியலறை

ஆகியவற்றிற்குகந்த

கிருமி அகற்றி
நீமோல்

விலை ரூபா
70/- மட்டும்

மருத்துவ நிலையங்கள்,
பாடசாலைகள்,
வர்த்தகர்களுக்கு
கவர்ச்சிகரமான
கழிவு

"மில்க்வைற்"
(சி/7057)

சிறுகதை

# பரிவும் பகிர்வும்

## மலரன்னை

அந்தத் தெருவின் முகப்பில் அமைந்திருந்த அழகான சிறிய வீட்டின் பின் புறத்தில் ஒரு வாழைத்தோட்டம். வாழைகள் மிக உயரமாக வளர்ந்து இலை பரப்பிப் பசுஞ் சோலையாகக் காட்சியளித்தன. பல மாதங்களின் முன் குலை போட்ட வாழையொன்று அடியோடு வெட்டப்பட்டு விட்டதால் அவ் விடத்தில் ஒரு பள்ளம் ஏற்பட்டிருந்தது. அந்தப் பள்ளத்துக்குள் தான் அவ் வீட்டு நாயான 'ஜிம்மி'யின் பிரசவ விடுதி அமைந்திருந்தது.

முதலில் ஜிம்மி குட்டிபோட்டிருக்கும் செதியைக்கண்டு பிடித்தவன் அவ் வீட்டுக்காரனின் செல்வமகன்முரளிதான். எத்தனை குட்டிகள் என்று எட்டிப் பார்த்து விடத் துடித்தவனை ஜிம்மி நெருங்க விடாமல் உறுமித் துரத்திற்று. வழமையாக வாலை ஆட்டிக் கொண்டு பின்னால் வரும் ஜிம்மியின் செயல் அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது. "அம்மா!" என்று அழைத்த வண்ணம் தாயிடம் ஓடினான்.

"அம்மா! எங்கட ஜிம்மி வாழைக் கிடங்குக்கை குட்டி போட்டிருக்குது. எத்தினை குட்டி எண்டு பாப்பமெண்டால் கிட்டப் போகவிடுதில்லை."

"உன்னை ஆர் அங்கை போகச் சொன்னது? குட்டி போட்ட நாய்க்குக் கிட்டப் போனால் கடிச்சுப்போடும். கிட்டப் போயிடாதை". அறிவுறுத்தலோடு அம்மா சொன்னாள்.

முரளிக்கோ குட்டிகளை ஆராய்ந்து பார்த்துவிடவேண்டும்என்ற தாபம். அம்மாவோ பின் பக்கம் போகவிடாமல் 'சென்றி'. இருக்கட்டும் பேந்து டியூசனாலை வரயுக்கை பாபுவையும் ராஜனையும் கூட்டிக் கொண்டு வந்து கிட்டப்போய் பார்ப்பம்' முரளி மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

ஜிம்மி அவர்களது வீட்டுக்கு வந்து ஒரு வருடம் தானிருக்கும். அளவெட்டியில் ஆமி முன்னேறியபோது அங்கிருந்து வெளியேறியவர்களுடன் எடுபட்டு வந்துவிட்ட ஜிம்மி களைத்துப் போய் இவர்களது வீட்டின் முன்னால் படுத்திருந்தது. மூச்சிரைத்தபடி கிடந்த நாயைச் சுண்ணுற்ற முரளி பச்சாத்தாபத்துடன் அதற்குத் தண்ணீரும் வைத்து உணவும் வைக்க, அது இவர்களுடைய வீட்டிலேயே தங்கி விட்டது. முரளி அதற்கு 'ஜிம்மி' என்று பெயரும் சூட்டிவிட்டான். அம்மாவுக்கென்றால் ஜிம்மியைப் பிடிக்கவே பிடிக்காது. அப்பாவும் முரளியும் தான் அதற்கு ஆதரவளிப்பார்கள். ஜிம்மியும் அவர்களது குடும்பத்தில் ஒரு ஜீவனாய் ஒன்றிவிட்டது.

பொழுது சாயும் வேளை. சிறுதுமியாகத் தூறத் தொடங்கிய மழை சோ! வெனப் பொழிந்து தள்ளிவிட்டது. மழைக் குளிருக்குப் போர்வையை இழுத்துப் போர்த்தபடி இதமாகத் தூங்கிக் கொண்டிருந்த அப்பாவை, அம்மாவின் குரல் எழுப்பிவிட்டது. "இஞ்சருங்கோப்பா! இஞ்சை ஒருக்கா வந்து பாருங்கோ. நீங்கள் அண்டின நாய் கண் முளிக்காத குட்டியளையும் கொண்டு வந்து குசினி விறாந்தையிலை வைச்சுக் கொண்டு கிடக்குதப்பா. எனக்குப் பாக்க என்னமோ செய்யுது. குட்டியள் நெளியிறதைப் பார்த்தால் புழு நெளியிற மாதிரி வயித்தைப் பிரட்டுது." அம்மாவின் கூக்குரலால் விழிப்புற்ற அப்பா மனமின்னாமல் போர்வையை விலக்கிச் சோம்பல் முறித்தபடி. "இண்டைக்கு ஞாயிற்றுக் கிழமை கொஞ்ச நேரம் நிம்மதியாய்த் தூங்குவமெண்டு நினைக்க இதென்னடா கரைச்சலாக் கிடக்கு." சொல்லியவாறே எழும்பி வந்தவர், முதற்காரியமாய் ஆட்டுக் கொட்டிலுக்குள் இடம் ஒதுக்கிக் கிடுகுகளால் மறைப்பும் செய்து. சாக்கு ஒன்றையும் கொண்டு போய்ப் போட்டு நாயையும் குட்டிகளையும் அங்கு குடியேற்றினார்.

அம்மா, அடிக்கடி சொல்லிக்கொள்வாள். "இந்த நாய்க்குட்டியள் கொஞ்சம் வளந்த உடன ஆரையும் பிடிச்சுக் கறிச்சந்தைக்குள்ள கொண்டு போய் விட்டிட்டு வரச் சொல்ல வேணும். எனக்கு உதுகள் தாய்க்குப் பின்னாலை குடுகுடுவெண்டு ஓடித் திரியிறதைப் பார்த்தால் அருவருப்பாய்க் கிடக்கு சிலநேரத்திலை வீட்டுக்கையும் கூட்டிக் கொண்டு வரப்பாக்குது." அம்மாவின் வார்த்தைகள் சில சமயங்களில் முரளியின் காதுகளிலும் விழுவதுண்டு. முரளி இதையிட்டுப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. 'குட்டிகளைக் கடத்த அம்மாவால முடியுமே?' என்று பேசமாலிருந்துவிட்டான்.

ஒரு நாள் மத்தியானம் முரளி இன்னும் பாடசாலையால் வரவிலலை. அப்பா சாப்பிடடுவிட்டு நாய்க்குச் சோறு கொண்டு வந்து வைத்தவர் நாயைக் காணாது திகைத்துப் போனார். வழமையில் அவர் சாப்பிடுவதை ஊகித்து விடும் நாய், வெளியில் தனது சாப்பாட்டிற்காகக் காத்திருப்பது வழக்கம் இன்று? ... "உஞ்சு! உஞ்சு! ஜிம்மி! ஜிம்மி!" என்று உரக்கக் கூப்பிட்டுப் பார்த்தார், நாயைக் காணவில்லை. அம்மாவிடம் கேடுப்பலனில்லை என்று உணர்ந்த அப்பா, கையைக் கழுவிவிட்டுத்தானே தேடுதல் வேட்டையில் இறங்கினார்.

நாய்க்கும் குட்டிகளுக்குமெனத் தான் ஆட்டுக்கொட்டிலில் அமைத்துக் கொடுத்திருந்த இடத்தில் போய்ப் பார்த்தார். அங்கே!... .. ஜிம்மி படுத்திருந்தது. அப்பாவைக் கண்டதும் படுத்திருந்தபடியே வாலைச் சிறிது ஆட்டிவிடடுப் பேசாமல் கிடந்தது அப்பாதிடுக்கிட்டார் குட்டிகள் ஒன்றையும் காணவில்லை. கிடடப் போய்க் குனிந்து நாயின் முகத்தை உற்றுப் பார்த்தார். அதன் இரு கண்களிலும் நீர் வடிந்தபடி இருந்தது. அப்பாவிற்கு ஓரளவு விஷயம் விளங்கி விட்டது.

"இஞ்சரும் மைதிலி நாய்க்குட்டியள் எல்லாம் எங்கே?"

"உவன் கந்தசாமி வந்தாப் போலை, நான்தான் பிடிச்சுக் கொண்டு போய்ச் சந்தையடியிலை விடச் சொன்னநான்."

"உமக்குக்கொஞ்சமெண்டாலும் ஈவிரக்கம் இருக்கே, அங்கை போய்ப்பாரும். நாய் சாப்பிடவும் எழும்பி வராமல் கிடக்கு. கிட்டப் போய்ப்பார்த்தால் இரண்டு கண்ணாலையும் கண்ணீர் வடியுதப்பா. எனக்குப் பாக்கப் பொறுக்கேல்லை."

"உங்கடை இரக்கமும் நீங்களும். நாலு குட்டியையும், தாயையும் வைச்சு எங்களாலை சாப்பாடு போட ஏலுமே? சந்தைக்கை எண்டால் குட்டியல் அங்கினை கிடக்கிற மச்சக் கழிவுகளைத் திண்டு பிழைச்சுக் கொள்ளுங்கள். விருப்பமெண்டால் ஆரும் பிடிச்சுக் கொண்டு போயும் வளர்க்குங்கள். நாங்கள் எல்லாத்தையும் வைச்சு அரியண்டப் படுகிறதே? நல்லாய் இருக்கு உங்கட கதை."

அதற்குமேல் மைதிலியோடு கதைப்பதில் பிரயோசனமில்லை என்பதை உணர்ந்தன் கேசவன். மகன் முரளியும் பாடசாலை விட்டு வீட்டிற்கு வந்தவன் குட்டிகளைத் தேடினான். அவற்றைக் காணாததால் அம்மாவுடன் கோபித்துக் கொண்டு சாப்பாடு வேண்டாமென அடம் பிடித்து அழுதபடி நித்திரையாகிவிட்டான். இவ்வளவிற்கும் மைதிலி மட்டும் துளிகூட அசையவில்லை.

நேரம் மூன்றரை மணியாகிவிட்டது. முரளிக்கு நாலு மணிக்கு டியூசன். மைதிலி மெல்ல முரளியை எழுப்பினாள். 'முரளி! முரளி! எழும்பு ராசா. பாபு வரப் போறான். டியூசனுக்குப் போக நேரமாயிட்டுது.'

பாபு என்று சொன்னதும் முரளி எழும்பி விட்டான். நண்பர்களுடன் விளையாடுவதில் அவனுக்கு அவ்வளவு ஆர்வம். சாப்பாட்டை நினைவுபடுத்தினால் முரளிக்கு நாய்க் குட்டிகளின் நினைவு வந்து விடுமென நினைத்த மைதிலி பிஸ்கட்டும், வாழைப் பழமும் சாப்பிடக் கொடுத்தாள். முரளியும் அவற்றைச் சாப்பிட்டு விட்டு அம்மாதந்த தேநீரையும் பருகிவிட்டு நண்பர்களுடன் டியூசனுக்குப் புறப்பட்டு விட்டான்.

மகனை டியூசனுக்கு அனுப்பிய பின்னர் மைதிலி ஏதோ கதைப் புத்தகமொன்றில் மூழ்கிப் போய் விட்டாள். அவளுக்குத் தான் வேறு என்ன பொழுதுபோக்கு? கதை சுவாரஸ்யமாகப் போனதில் நேரம் போனதே தெரியவில்லை.

"டுமீல்! .."

சத்தம் கேட்டுத் திடுக்கிட்டாள் மைதிலி. 'எங்கைபோ கிட்டடியில செல் விழுந்திட்டுதோ. எங்கட முரளியும் டியூசனுக்குப் போனவன் காணயில்லை' என்று நினைத்தவள் நேரத்தைப் பார்த்தாள். மணி ஆறு பத்தாகி இருந்தது. 'அஞ்சு மணிக்கு டியூசன் முடிந்திருக்க வேணும். இன்னும் முரளியைக் காணயில்லை. நல்லாய் விளையாடிப் போட்டு வரட்டும். இண்டைக்கு ஆளை வெருட்டி வைக்க வேணும். வர வர விளையாட்டுக் கூடிப் போச்சுது.' மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

இருந்தாலும் முரளி இன்னும் வந்து சேராததால் அவளுக்கு மனதிற்குள் ஓர் உளைச்சல் ஏற்பட்டது. 'கேற்'வரை வந்து நின்று தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவ் வழியே சைக்கிளில் போன ஒருவரை இடைமறித்த எதிர் வீட்டு ஆச்சி "தம்பி உங்கினை கிட்டவா ஏதோ சத்தம் கேட்டுதடா என்ன பிரச்சினையாம்?"

"அது — ஆரோ மூண்டுபிள்ளையள் வயலுக்கை பட்டம் ஏத்திக் கொண்டிருந்தவையாம். வயலுக்கை ஒரு வெடிக்காத செல் கிடந்திருக்கு. பெடியள் அதை எடுத்துத் தட்டிப் பாத்திருக்கினம்போல அது வெடிச்சிட்டுது அந்த இடத்திலையே இரண்டு பேர் சரியாம். மற்றப் பெடியனை இரத்தம் ஒழுக ஒழுக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு பேகினம். ஆர் பெத்ததுகளோ! ம்..! பெருமூச்சுடன் சொல்லி விட்டுப் போனார்.

மைதிலிக்கு தூக்கிவாரிப் போட்டது. முரளியையும் இன்னும் காணவில்லை. நெஞ்சு பக்! பக்! என அடித்துக்கொண்டிருந்தது. கைகளிரண்டாலும் நெஞ்சைப் பொத்திப் பிடித்துக்கொண்டாள். யாரோ ஒருவரின் சைக்கிளில் வந்து இறங்கிய கேசவன் தலையில் கையை வைத்தபடி, "ஐயோ! மைதிலி ...! எங்கடை முரளி!" ..... சொல்லி முடிப்பதற்குள் மைதிலி மூர்ச்சையாகி விழுந்துவிட்டாள். வீட்டில் சனக்கூட்டம் பெருகி விட்டது. மைதிலி சுயநினைவுக்கு வருவதும் பின்னர்மயங்குவதுமாயிருந்தாள்.

ஒரு பெட்டியைக் கொண்டு வந்து நடுஹோலில் வைத்தார்கள். சிறிது நேரத்தில்கொண்டு போய் விட்டார்கள். அவ்வளவு தான் அவளது புலனுக்குத் தெரிந்திருந்தது. ஆனால்முரளியைமட்டும் காணவேயில்லை.

நாட்கள் சில நகர்ந்தன. கேசவனும், மைதிலியும் நடைப் பிணமாகி விட்டனர். அன்று இரவுதான் கேசவன் சற்றுக்கண்ணயர்ந்திருந்தான். மைதிலியால் எதுவுமே செய்ய முடியவில்லை. இப்பொழுதெல்லாம் அழுகைகூட வர மறுத்து விட்டது. நடு நிசியாதலால் ஊரே உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. மைதிலி படுக்கையை விட்டு மெல்ல எழும்பினாள். நடந்து வந்து பின கதவைத் திறந்தாள். அவளுக்குத் தலையைச்சுற்றியது. அப்படியே கதவைப் பிடித்தபடி வாசற்படியில் இருந்து விட்டாள். அவளது சிந்தனைகளோ!... முரளியையே சுற்றிச் சுற்றி வந்தன. எத்தனை நேரம் தான் அப்படியே இருந்தாளோ! — அவளது பாதங்களில் ஈரமான ஸ்பரிசத்தை உணர்ந்தாள். குனிந்து பார்த்தாள் மைதிலி. அங்கே! .. அவர்களது ஜிம்மி தான் அவளது காலடியில் கிடந்தபடி அவளது பாதங்களைத் தன் நாவினால் நக்கிக் கொண்டிருந்தது. மைதிலி என்ன நினைத்தாளோ! .. அவளையறியாமலே அவளது கை ஜிம்மியின் தலையைமெதுவாக வருடியது.

---

## உறவுகள் ஓராயிரம்

சகோதரனே!
எல்லாம் முடிந்து
பகலை இருள் விழுங்கிய பிற்பாடு
நண்பர்கள் படுக்கைக்கு
சென்ற பின்னர்
நீ மட்டும் தனியாக
இருக்கும் வேளைகளில்
உன்னுடைய மறுபக்கம்
விழித்துக் கொள்ளும்.

தூரத்தே கேட்கின்ற தாலாட்டு
உன் தாயினுடையது போல தோன்றும்...
தெருவோரம் இருமிய படி போகும்
கிழவரும் கூட தந்தையின் சாயலில்..
அதோடு கூட பக்கத்து வீட்டில்
உரத்த குரலில் பாடம் படிக்கும்
சிறுமி "அண்ணா" என்று அழைப்பதாய்...
தலையைத் திருப்பி நோக்குகையில்
வெறுமை மனசை நெருட
நீ தவழ்ந்த வீட்டையும்
தளிர் நடை போட்ட
முற்றத்தையும் நினைத்து
கண்ணீரோடு எழுந்து போவாய்!

அயர்ந்து உறங்கும்
நண்பனின் அருகில்
படுக்கும் போது
அவனும் கூட
"அம்மா" என்றழைத்தபடி
புரண்டு படுப்பான்!

சகோதரா!
அப்போதுதான் உனக்கு
அதிகமாக கண்ணீர் வரும்
நண்பனை அணைத்து
தட்டிக் கொடுப்பாய்
அவன் முகத்தில்
அன்னையை, தந்தையை, தங்கையைக்
கண்ட திருப்தியோடு
அமைதியாகப் படுப்பாய்
மறுநாள் விடியும்...
எல்லாம் வழமை போல...
உன் தோழர்கள் காத்திருப்பார்கள்
நீ இன்னமும் உறுதியோடு
நண்பருடன் நடப்பாய்.

— வினோதினி

---

## இளமையில் இவர்கள்

பதின்மூன்றாவதுவயதில் பள்ளிக்கூட வாழ்வை உதறித் தள்ளிவிட்டு, வேலை தேடி லண்டன் நகருக்குப் போனான் ஓர் இளைஞன். அக்காலத்தில் நாடகம் பார்க்க வருகிறவர்களின், குதிரைகளைப் பாதுகாக்கும் காவற்காரனாகப் பொறுப்பை மேற்கொண்டான். இதனால்இவனதுவருவாய் பெருகியது. பின்னர் தனக்கு உதவியாக சிலரை வைத்துக் கொண்டான். அதற்கு முன்பு மாமிசக் கடையில் எடுபிடியாளனாக இருந்தான். இவன்தான் பின்னர் உலகம்புகழும் நாடக ஆசிரியராகினார். அவர்தான் ஷேக்ஸ்பியர்.

டப்ளின் நகரத்தில் ஒரு ஜமீன்தாரிடத்தில் மாதம் 18 ஷில்லிங் சம்பளத்திற்கு கணக்காளராகப் பணியாற்றினார் ஓர் இளைஞர். பின்நாளில் உலகப் புகழ் பெற்ற பல நாடகங்களை ஆக்கினார். அவர்தான் பெர்னாட்ஷா.

# சத்தியம் தவறிய சத்தியக்கடதாசிகள் - உடுகம் பொலவின் குத்துக்கரணம்

**1992** ஏப்ரல் 4ஆம்திகதி கொழும்பு நகரம் பெரும் பரபரப்புக்குள்ளானது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்ற பதவிப் பொறுப்பை வகித்து வந்தவரான பிரேமதாசா உடுகபொல வெளியிட்ட இரண்டு சத்தியக் கடதசிகள் இந்தப் பரபரப்புக்கு காரணமாகியது.

''அரசியல்நோக்கம்கொண்ட கொலைகளைப் புரிவதற்கு அரசாங்கம் சட்டவிரோதமான கொலைக் கும்பலான கரும்பூனைகள் என்ற அமைப்பை உருவாக்கியிருந்தது. ஆளும் ஐ தே. கட்சியினால். உருவாக்கப்பட்ட இக்கொலைக் கும்பலால் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களில் அறுபது பேர்வரையில் படுகொலை செய்யப்பட்டனர். எப்பாவெல படுகொலை இதற்கு ஒரு உதாரணம்'' என்பன போன்ற பலவிடயங்களை ஒரு சத்தியக்கடதாசி எடுத்துச் சொல்லியது.

இன்னுமொரு சத்தியக் கடதாசியில் 1988 இன் ஜனாதிபதி தேர்தலின்போது இடம்பெற்ற மோசடிகள் பற்றி எடுத்துக் கூறப்பட்டது. இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையில் அடங்கியுள்ள உண்மைகள் சில பற்றி என்னால் சாட்சியம் கூறமுடியும்என்பதுதொடங்கி ஆள் மாறாட்டம் செய்வதற்காக அநுராதபுரம் யாத்திரிகர் விடுதியில் ஆட்கள் தங்க வைக்கப்பட்டமை, தேர்தல் கால வன்முறைகளை அரசாங்க ஆதரவு சக்திகள் தூண்டியமை என்பன உடபட பல குற்றச் சாட்டுக்கள் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

குற்றச் சாட்டை நிரூபிக்கும் வகையிலான புகைபபடங்களும், ஆவணங்களும் கூட கொழும்பிலுள்ள மனித உரிமைகள் பேணும் அமைப்பு ஒன்றிடம்கையளிக்கப்பட்டது. அரசினால் அமைக்கப்பட்ட குழுவே தேர்தல்களின்போது இடம்பெற்ற ஊழல்களுக்கும் வாக்குச்சீட்டுமோசடிகளுக்கும் தேர்தல் கடமையில் ஈடுபட்ட அதிகாரிகள் மிரட்டப்பட்டமைக்கும் காரணம் என்று அச் சத்தியக் கடதாசிமேலும வலியுறுத்தியது.

தன்னிச்சையான-சுயேட்சையான விசாரணைக் குழுஒன்று அமைக்கப்படுமானால் அதன் முன்பு தோன்றி கரும்பூனைகளால் கொல்லப்படட எதிர்க் கட்சி முக்கியஸ்தர்கள் 156 பேரின் பெயர்களை வெளியிட முடியும் எனவும் உடுகம்பொல பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்தார்.

ஒரு பிரதி பொலிஸ்மாஅதிபரின்பகிரங்க கோரிக்கை என்ற வகையில் எதிர்க்கட்சிஅரசியல் வாதிகள் அரசின் மீது வசைபாட இதனையும் ஒரு கருவியாக்கிக் கொண்டனர்.

கொழும்பு பத்திரிகைகளின் கதாநாயக அந்தஸ்து பிரகடனப்படுத்தப்படாமலேயே பிரேமதாசா உடுகம்பொலவிற்கு வழங்கப்பட்டது.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ணா கொலையுண்டமையுடன் தனது கெட்டகாலம் ஆரம்பித்ததாக புலம்பியதும், காமினி லலித்குழுவினர் ஐ.தே கவிலிருந்து வெளியேற்றப்பட்டதால் அவர்களது ஆதரவாளர் என்ற வகையில் எனக்கு அரசு தொல்லை தருகின்றது என்று கூறியதும் பத்திரிகைகளில் முக்கிய இடம் பிடித்துக் கொண்டது.

உடுகம்பொலவின் குற்றச் சாட்டுக்களால் அரசாங்க மட்டத்தில் அதிர்ச்சி அலை பரவ அறிக்கைகளும், மறுப்பறிக்கைகளும், பதிலகளுமாக பத்திரிகைகள் பரபரத்தன. விவகாரம் பத்திரிகைகளோடு மட்டும் நிற்கவில்லை நீதிமன்றத்திற்கும் சென்றது.

அரசாங்கத்தின் மீது அவதூறு பரப்பியது என்ற குற்றச்சாட்டு உடுகம்பொலவின் மீது மட்டுமன்றி அவரது சத்தியக் கடதாசிகளை பிரசுரித்த பத்திரிகைகள் மீதும் சுமத்தப் பட்டது.

நீதிமன்றில் ஆஜராகக் கோரும் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது. அழைப்பாணை கௌரவிக்கப்படாத நிலையில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு தேடிக்கண்டு பிடிக்கவென இரகசியப்பொலிசாரைக் கொண்ட தனிப்பிரிவு அமைக்கப்பட்டது. பிரேமதாசா உடுகம்பொலமாளிகைகளுக்குள் தலைமறைவானார்.. ''முடியுமானால் என்னைக் கைது செய்து பாருங்கள்'' என்று சவாலும் விட்டார் சிறிலங்காவின் பொலிஸ் திணைக்களம் கையைப் பிசைந்து கொண்டு நிற்க, அரசாங்கத்தின் கண்களுக்குள் மண்ணைத் தூவிவிட்டு மீனவன் போல வேடமிட்டு கடலைத் தாண்டிப் போனார்.

இந்த நிலையில் தான் அரசியல் அரங்கில் காட்சிமாறியது.

பிரேமதாசா கொலையுண்டார்.

தொலைபேசி உரையாடல்களை அடுத்து கடவுச் சீட்டுடன் சென்னை விமான நிலையத்திலிருந்து ஏயர்லங்கா விமானம்மூலம்கட்டுநாயக்கா விமான நிலயத்திற்கு விரைந்தார் உடுகம்பொல. அப்போதும் அவரை ஒரு பொலிஸ் அதிகாரி (உடுகம்பொலவின் சகோதரர்) தான் வரவேற்றார் நீதிமன்றத்தின் பிடியாணை அப்போதும் செல்லுபடியானதாகவே இருந்தது. ஆனால் உடுகம்பொல கைது செய்யப்படவில்லை. நாட்டின் ஜனாதிபதியை சுதந்திரமாகச் சென்றுசந்திக்கின்றார்.

பத்திரிகையாளர்கள் அரசிடம் கேள்விகள் தொடுக்கின்றனர்.

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பலர் சுதந்திரமாக நடமாடித் திரிவதை நீங்கள்காணவில்லையா என்று பதில் கேள்வி கொடுத்தது அரசு. இவற்றின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜராகிய முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மீண்டும் ஒரு சத்தியக் கட தாசியை தாக்கல்செய்கின்றார்.

தவறாக வழி நடத்தப்பட்டு விட்ட நிலையில் அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தக் கூடிய வகையில் தவறான தகவல்களை தெரிவித்ததாக குறிப்பிட்ட அச் சத்தியக் கடதாசி, இதனால் எவருக்கும் தொந்தரவு அல்லது சங்கடங்கள் ஏற்பட்டிருந்தால் மன்னிப்பு கோருவதாகவும் கூறியது. பொய்யானதும், ஆதாரமற்றதுமான தகவல்களை தனது சத்தியக் கடதாசி தெரிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தெளிவான நிலையிலும், சித்த சுவாதீனத்தோடும் வெளியிட்ட இச் சத்தியக் கடதாசியை இப்போது நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுவிட்டது.

எனவே உடுகம்பொல குற்றமற்றவராக - நிரபராதியாக சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறிலங்காவின் நீதித்துறை, அரசாங்கத்தின் கைப்பொம்மையாகிப் போய் கைகளைப் பிசைந்துகொண்டு நிற்கின்றது

பொறுப்பு மிக்கவராக இருந்த ஒரு மனிதரின் குற்றச் சாட்டுக்கள் அர்த்தமற்ற ஆடம்பரங்களாக குப்பைக்கூடைக்குள் வீசப்பட்டாயிற்று

உடுகம்பொலவின் 'கெட்ட' காலத்தின்போது அவரைக் கதாநாயகன் போல மகுடம் சூட்டிய தென்னிலங்கை பத்திரிகைகள் இனி என்ன அந்தஸ்தை வழங்குவது என்பதில் குழம்பிப் போயுள்ளன.

உடுகம்பொலவின் சத்தியக் கடதாசிகளையே ஆதாரமாகக் காட்டி அரசியல் நடத்திய எதிர்க்கடசிகள் அடுத்துஎன்ன செய்வது என்று தெரியாமல் திக்கு முக்காடிப் போய் இருக்கின்றன.

உடுகம்பொலவின் குற்றச் சாட்டு பட்டியலையும், அதற்கான ஆதாரங்களையும்,புகைப்படங்களையும் வைத்துக் கொண்டு மனித உரிமைஅமைப்பு பிடரியைச் சொறிகின்றது

ஆனால்,

மூன்றாம் உலக நாடுகளில் எல்லம் மனித உரிமை பேணப்படுவதில் அக்கறை காட்டும் அமெரிக்கா உடுகம்பொலவை வரவேற்கத்தயாராகிவிட்டது கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவரகத்திடம் உடுகம் பொலவின் கடவுச்சீட்டு நுழைவு அனுமதியை எதிர்பார்த்தபடி ......


## அறிவித்தல்

### கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

வலி. வடக்கு – வலி. தெற்குப் பகுதி
தெல்லிப்பழை

மேற்படி சங்கக் கிளைகள் புனரமைப்புச்செய்தலும், புதிய அங்கத்தவர்களைச் சேர்த்தலுமான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிளைகள் கிராம சேவையாளர் ரீதியாக அமைக்கப்படவுள்ளதால், தற்போது அங்கத்தவராகவுள்ளவர்கள் சுன்னாகம் கால்நடை வைத்தியர் பணிமனையில் இயங்கும் எங்கள் அலுவலகத்துக்கு 18-8-93க்கு முன்னதாக வருகைதந்து தங்கள் கிராமசேவையாளர் பிரிவை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அதேவேளையில்,

புதிய அங்கத்தவராகச் சேர விரும்புவோரும், குறிப்பிட்ட திகதிக்கு முன்பதாக மேற்படி அலுவலகத்தில் அலுவலக நாட்களில் காலை 9 00 மணியிலிருந்து நண்பகல் 12 00 மணிவரை பங்குப்பணமான ரூ. 100/-ஐயும், பிரவேசப் பணமான ரூ. 10/-ஐயும் செலுத்தி அங்கத்துவத்தையும் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இடைக்காலப் பணிப்பாளர் சபை,
22-07-1993. (5449) கால்நடை வளர்ப்போர் சங்கம்



## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 17 — 12 — 1972



வீரச்சாவு 23 — 07 — 1991

### வீரவேங்கை குரு

வாமதேவன் விக்கினேஸ்வரன் (பாபு)
(தங்கோடை, காரைநகர்)

தேசத்தின்- விடுதலைக்காய்
பாசத்தைத் துறந்து நீ
பாயும் புலியாகிப் பகை முடிக்கக்
களம் புகுந்தாய்
கட்டைக்காட்டினிலே கயவரோடு
களமாடி வீழ்ந்த உன்னை
மண்மாதா ஏந்திக் கொண்டாள்
மடிமீது மகனாக்கித் தூங்க வைத்தாள் - நீ
நிரந்தரமாய்த் தூங்கிவிட்டாய்
நித்திரையை மறந்து நாங்கள்
நிம்மதியை இழந்து விட்டோம்.

எமது இல்லத்தில் இன்று (23 07. 93) வெள்ளிக் கிழமை நடைபெறவிருக்கும் அஞ்சலி நிகழ்வில் சகபோராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உன் நினைவுச் சுமைகளைச் சுமந்து வாழும்
குடும்பத்தினர்.

தற்போதைய முகவரி:-
மடத்தடி ஒழுங்கை,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

(சி-7038)



## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



கட்டைக் காட்டில் இருந்து ஆனையிறவு நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்துடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய

### கப்டன் பாண்டியன்

துரைசிங்கம் கிருஸ்ணகுமார்
பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி க. பொ. த. சாதாரணதர மாணவன்

பிறப்பு: 9-7 1972 வீரச்சாவு: 23-7-1991

இருபத்தி நான்கு மாதங்கள் இன்று
ஓடோடி வந்து விட்டது பாண்டியன்
எத்தனை எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உன்னை மறப்பதில்லை பாண்டியன்
நாட்டுமக்கள் துயர் துடைக்க நீசென்றாய் பாண்டியன்
களத்திலே நீ குதித்தாய் பாண்டியன்
கட்டுவன் கோட்டை மண்டைதீவு மாங்குளம்
கீரிமலை தச்சன்காடு சென்றும் நீ
வெற்றி கண்டு வந்தாய் பாண்டியன்
கட்டைக்காடு சென்ற போது காலன்
காத்து நின்ற தோடா பாண்டியன்.

வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

உன்பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்,
ஜேர்மனி அண்ணா, அண்ணி,
சாந்தா மாமி, மச்சான் பவன்.

(5446)

# சீக்கிய கிளர்ச்சியை நசுக்கிவரும் இந்தியரின் பேய் ஆட்சி

ஆகஸ்ட், 1991; ருமேனியா,

மாலை நேரம்; ருமேனியாவுக்கான இந்திய தூதரும் அவரது துணைவியாரும் உலாவிக்கொண்டிருந்தார்கள். திடீரென, கார் ஒன்று வந்து நின்றது துப்பாக்கிகள் தூதுவரை நோக்கி ரவைகளை கக்கின.

தர்ம நியாயங்களை ஓரம்தள்ளிவிட்டு, பஞ்சாப் மக்கள் மீதான ஒரு கொடுமையான போரினை நடாத்திய பஞ்சாப் மாநில மற்றும் பம்பாயின் முன்னாள் காவல்துறை தலைவரும, ருமேனியாவுக்கான இந்தியத் தூதருமான றீலியோ பிரான்சிஸ் றிபெய்ரோ சூண்டடிபட்டு ருமேனிய மருத்துவமனையில் இருந்தார்.

வயது முதிர்ந்த அந்த மனிதர் எதிர்பார்த்தபடி, இந்திய அரசியல்வாதிகளோ அல்லது அவரது வெளிவிவகாரத்துறை மேலாளர்களோ அவரை வந்து பார்க்கவில்லை. ஏனெனில், புதுடில்லியைப் பொறுத்தவரை, அந்தமனிதர் ஒரு மறக்கப்பட்ட கதாநாயகன்; புதுடில்லியை பொறுத்தவரை மட்டும்தான்.

இந்திய நாட்டவர்களின் இன்றைய கதாநாயகர்களாக இரண்டு சீக்கியர்களே இருக்கிறார்கள். நம்புவதற்கு முடியாமல்விட்டாலும் இது உண்மையானதுதான்.

பஞ்சாபின் காவல்துறைத் தலைவர் கே. பி. எஸ். கில்லும். பம்பாயின் காவல்துறை தலைவர் அமர்ஜித்சிங் சாம்ரா அவர்களும்தான இவ்விரு கதாநாயகர்களாக உள்ளார்கள். இந்தியர்களைப் பொறுத்தவரைதான் இவர்கள் இருவரும் கதாநாயகர்கள்; அவர்களது இனத்தவரைப் பொறுத்தவரை ஒருவர் பயனற்ற சீக்கியர். மற்றவர் இனத்தின் கொடிய எதிரி.

அன்மையில் பம்பாயில் குண்டுகள் வெடித்து இந்தியாவை உலுக்கிய பொழுது காவல்துறைத் தலைவர் திரு. அமர்ஜித்சிங் சாம்ரா வேகமாகவும், உறுதியாகவும் செயற்பட்டார். அதனை தொடர்ந்து, எந்தக் கலவரமுமே நடவாது பார்த்துக் கொண்டார். அரசியல் தலைவர்கள் அர்த்தமற்ற அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கும்போது உண்மையான குற்றவாளிகளில் பலரை திரு.சாம்ராவின் படையினர் வளைத்திருந்தனர்.

பாப்ரிமசூதி இடிக்கப்பட்ட பின்பு பபபாயில் தோன்றிய மதக் கலவரங்களைத் தடுப்பதற்கு திரு. சாம்ராவால் முடியவில்லை. இதைப் போன்ற வழமையான பல குழப்பங்களைத் தடுப்பதற்கு சாம்ரா தவறி இருந்தார். பம்பாய் இயல்பாகவே சட்டத்தையும், ஒழுங்கையும் கடைப்பிடிக்கும் ஒரு நகரமல்ல. நேர்மையற்ற அரசியலாளர்களும், அவர்களின் பாதுகாப்பில் இயங்கும் நிழல்உலக சாம்ராஜ்யங்களும் பொதுவாகவே சட்டத்தையும், ஒழுங்கையும் மதிப்பதில்லை.

அரசியல்வாதிகளின் அதிகார பலத்தால், அமைதியும், திடமும் கொண்ட திறமைமிக்க மேலாளரான திரு. சாம்ராவின் கைகள் எப்போதும் கட்டுப்பட்டே இருந்தன. அனேகமாக பம்பாய் குண்டு வெடிப்புபலரை பலிகொண்ட பின்பே சாம்ராவின் கட்டுக்கள் அறுந்தன அல்லது சிறிது காலத்தற்கு முதலமைச்சர் சரத் பவாரால் தளர்த்தப்பட்டிருக்கலாம்.

இந்தக் கட்டுரையைப் பொறுத்தவரை இவ் அழகிய மேலாளர் எங்கள் நாயகன் அல்ல. பஞ்சாபை ஆட்டிப் படைக்கும இறுக்கமும,கொடூரமும் நிறைந்த அந்த மற்றவர்தான்.

பஞ்சாபிய பிரச்சினையைக் கையாள்வதில் கே பி. எஸ். கில்லைத் தேர்ந்தெடுத்ததில் தான் இந்திய மேல்தட்டு அரசியல்வாதிகளின் தந்திரம் தங்கி இருந்தது. இரும்பை இரும்பால அறுப்பதுபோல், அந்த இனத்தின் எழுச்சியை அழிப்பதற்கு அந்த இனத்துக்கு உள்ளேயே ஒருவரைத் தேர்ந்தெடுத்தார்கள்.

ஒரு ஜாட் சீக்கியருக்குரிய திடகாத்திரம், முரட்டுத்தனம் பழைமை பேணும்பண்பு அனைத்தையும் தன்னகத்தே கொண்ட கே. பி. எஸ். கில் பஞ்சாபில் படர்ந்திருந்த ஆயுதப் போராட்டத்தை முறியடிப்பதற்கு ஒரு நரியின் ராஜ தந்திரத்துடன் மிகத் திறமையாகச் செயற்பட்டார்.

இன்று ஆயுதப் படையினரின் துப்பாக்கிகளின் நெருக்கத்துக்கு நடுவில் பஞ்சாபிய மக்கள் வாழ்ந்தாலும் 59 ஆவது வயதில் நிற்கும் பஞ்சாபிய காவல்துறை தலைவர் ஓரளவு மேல் நிலையில் உள்ளார் என்பது வெளிப்படையானது.

காலிஸ்தான் விடுதலை இயக்கத்தின் இன்றைய நிலைக்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. ஒரு வகையில் சொல்லப்போனால். அவர்களின் அதீதமான மத நம்பிக்கைகளும், தெளிவற்ற செயற்பாடுகளும் கூட அவர்களின் அழிவுகளுக்கு காரணங்களாக இருந்தன.

தவறுகள் ஆரம்பத்திலிருந்தே வருகின்றன. ஒரு கெரில்லாப் போராளி பின் வாங்கிச் செல்வதற்கு (தப்பித்துக் கொள்வதற்கு) எந்த வழியுமே இல்லாத பொற்கோயிலுக்குள் இருந்து கொண்டு. ஆயுதப் போராட்டத்தைவழிநடாத்தியது விடுதலை இயக்கத்தின் அப்போதைய தலைவர் பிந்தரன் வாலே செய்தமுதலாவது தவறு. இந்தியப் படைகள் மத உணர்வை மதித்து பொற்கோயிலுக்குள் இறங்காது என முடிவெடுத்தது அவரின் அடுத்த தவறு.

அந்தப் போரின் முடிவில் திரு. பிந்திரன் வாலேயும் அவரது அடுத்தமட்டத் தலைவர்களும், போராளிகளில் பெருமளவினரும் மடிந்து போனது போராடடத்தை அடுதத கட்டத்திற்கு நகர்த்துவதற்கு முடியாத வெறுமையை உருவாக்கியது,

பலம் பொருந்திய இந்தியப் படைகளுடனான, முதலாவதும் இறுதியுமான யுத்தத்தை பொற்கோயிலுக்குள் நடத்துவதற்கு பிந்தரன் வாலே நினைத்திருக்கக் கூடாது. உணர்ச்சிகளின் அடிப்படையில் தன்னுடைய மரணத்தை அதற்குள் வைத்தே ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்த அவர், போராட்டத்தை தொடர்ந்து வழிநடாத்த தனது அடுத்தமட்டத் தலைவர்களையும், போராளிகளையும் நிச்சயமாக வெளியில் வைத்திருக்க வேண்டும்.

பிந்தரன் வாலே அவர்கள் நினைத்த மாதிரியே பொற்கோயிலுக்குள்படைகள் இறங்கியது. என்றுமில்லாதவாறு சீக்கிய மக்களை கிளர்ந்து எழ வைத்து, போராட்டத்தின் பால் நெருங்கிவரச் செய்திருந்தது உண்மைதான் ஆனால் மக்களை ஒருங்கிணைத்து பலமான சக்தியாக வழிநடத்த பிந்திரன் வாலேயின் பிற்பாடு ஆளுமைமிக்க தலைமை அங்கு இருக்கவில்லை. அதன்பின்பு தோன்றவும் இல்லை. இடை இடையே சிலர். தோன்றினாலும் அனேகமாக சில நாட்களிலேயே அவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள். இந்த வரிசையில் தான் அண்மையில் கொல்லப்பட்ட குர்பசன் சிங் மனோச்சவரல்லும் அடங்குகின்றார்.

பெரும்பாலான அரசியல் ஆய்வாளர்கள், சீக்கியர்களின் விடுதலைப் போராட்டத்தின் தேய்வுக்கு, மக்கள் தெளிவுபடுத்தப்படாமையும் ஒரு காரணம் எனக் கூறுகிறார்கள்.

காலிஸ்தான் விடுதலை இயக்கத்தவர்கள், படையினர் மீதான தாக்குதல்களை கடுமையாக நடத்தவில்லை, படையினர் போராளிகளை தேடி அழித்தார்களே தவிர, சண்டைகள் என பெரிதாக எதுவும் நடைபெறவில்லை. ஏன் சீக்கிய விடுதலை இயக்கத்தவர்களின் துப்பாக்கிரவைகள், படையினருக்கு அருகில் அனேகமான சந்தர்ப்பங்களில் வரவே இல்லை.

இவற்றைவிட, எந்தவொரு விடுதலை இயககமும் செய்யக் கூடாத மிகப் பெரிய தவறை சீககியர்களும் செய்தார்கள். அதென்னவெனில், அன்னிய உதவியில முழுமையாக தங்கி இருந்தது ஆகும்.

விடுதலை அமைப்பொன்று, தனக்கு இடைக்கக்கூடிய அனைத்து உதவிகளையும் பயன்படுதகி, முன் செல்ல வேண்டுமே தவிர அதில் முழுமையாக தங்கி இருபபதை தவிர்க்க வேண்டும். சீக்கியர்கள் இதில் தவறினார்கள்.

பனிப்போர் காலத்திற்கு பிந்திய உலக மாறுதல்கள் சீக்கிய போராளிகளை சடுமையாகவே பாதித்தது அமெரிக்காவின் அச்சுறுத்தல்களால் பாகிஸ்தானியர்கள் சீக்கியர்களை விட்டு தூர விலக வேண்டி இருந்தது.

இப்படியாக பல வழிகளிலும், காலிஸ்தான் இயக்கத்தவர்கள் தங்கள் அழிவை தாங்களே தேடி இருந்தாலும் அதில் கணிசமான பங்கு பஞ்சபின் காவல்துறை தலைவர் கே. பி. எஸ். கில்லுக்கும் இருக்கிறது.

சீக்கியர்களின் பலங்களையும் பலவீனங்களையும் நன்றாக அறிந்தவரான இந்த சீக்கிய காவல்துறை தலைவர் போர்க்களத்தில் காய்களை மிக நுட்பமாக நகர்த்தினார்.

தனது படையினரின் ஆயுதங்களை நவீனப்படுத்திய அதே நேரம் படையினரின் எண்ணிக்கையையும் இரட்டிப்பாக்கினார்; அதுவும் ஜாட் சீக்கிய இளைஞர்களைக் கொண்டே.

இதுவரை நாளும் இந்தியர்களுக்கும், சீக்கியர்களுக்கும் என இருந்த போர்முனை, இறுதியாக சீக்கியர்களுக்கும் சீக்கியர்களுக்குமிடையிலான போராக மாறியது.

அரசின் அடக்குமுறை இயந்திரமாக இங்கு பயன்பட்டது சாதாரண கிராமப்புறத்து ஜாட் இளைஞன் அரச பயங்கரவாதத்தின் விளைவாக. இயல்பாக மக்களிடையே எழுத்து நடந்ததாக அவரது தனிப்பட்ட வரலாற்றிலும் குறிப்புகள் இல்லை. இந்த மனிதர். அசாமிய காவல்துறை தலைவராக இருந்த பொழுதுநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட அசாமிய போராட்டக்காரர் ஒருவனை அடித்துக் கொலைசெய்தார். இது வெளித்தெரியவந்த ஓர் உண்மை. பஞ்சாபில் அனேகமாக எதுவுமே வெளிவருவதில்லை.

'பேய் ஆட்சி செய்தால் எங்கும் பிணம் தின்னும் காட்சிகள்' என்பதுதான் இன்றைய பஞ்சாபின் நிலை தன் இனத்தவரின் இரத்தச் சகதியில் நின்று 'கில்' இன்று வெற்றிக் கொடியை உயர்த்திஉள்ளார். சரி, முடிவு எப்படி இருக்கும் எனப்பார்ப்போம். இராணுவ ரீதியிலான மேலாண்மை பிரச்சினைக்குரிய தீர்வாக எங்குமே இருந்ததில்லை.

பஞ்சாபிய பிரச்சினைக்குரிய தீர்வைத் தேடி, 1984ஆம் ஆண்டுக்கு மீண்டும் சென்று ஹரியானாவுடனானஎல்லைச் சிக்கல்களை தீர்ப்பதன் மூலமும். நதி நீர் பங்கீட்டை ஒழுங்கமைப்பதன் மூலமும் சீககியர்களை திருப்திப் படுத்த இனிமேல் முடியாது. அதனை பொற்கோயிலுக்குள் படை இறக்கத்துக்கு முன்பு சிந்தித்திருக்க வேண்டும்

அதன் பின்பு நிறையவே நடந்து விட்டன. சீக்கியர்களின் மனங்களில் பல ஆறாத ரணங்கள்.

சீக்கியர்களுக்கு என்று ஒரு தேசம் அமைவதை இந்தியர்கள் ஒரு போதும் விரும்பப் போவதில்லை. இதொரு முடிவில்லாத சிக்கல். வளம்கொழிக்கும் பூமி ஒன்றை என்றும் சுடுகாடுபோல் வைத்திருப்பதைத்தவிர இந்தியர்களுக்கும் வேறு வழி இல்லை.

இவற்றை விட்டுப் பார்த்தாலும், இன்று வெற்றியில் திளைக்கும் கே. பி. எஸ். கில்

**குலோத்துங்கன்**

கின்ற கோபம், ஆட்டுவிக்கும் ஆளும்வர்க்கத்தை தவிர்த்து கருவியான — முகந்தெரியாத தன் இனத்தவன் மீதே இங்கு விழுந்தது.

அத்துடன் காவல்துறையினரின் அராஜகத்துக்கும் இங்கு குறை இருக்கவில்லை. சட்டத்தின்நெறிமுறைகளையும், தர்ம நியாயங்களையும் கில் எப்போதுமே கருத்தில் எடுப்பவரில்லை. மனித நேயத்தை மதி உண்மையில் ஒரு கதாநாயகன் அல்ல. இந்திய அரசியலாளர்களின் வெறும் கருவி. அதனை அவர் உணரவில்லை. ருமேனிய மருத்துவமனையின் உடனடிச் சிகிச்சைப் பிரிவில் இருந்து கொண்டு முன்னாள் பஞ்சாபிய காவல் துறைத்தலைவர் றீலியோ பிரான்சிஸ் றிபெய்ரோ உணர்ந்து கொண்டதை இன்று கில்லால் உணர முடியாதுதான்.

## சோழகமும் மனிதனும்

வல்லை வெளியில்
சோழகத்தின் ஆட்சி
எதிரே வந்த பாரச் சைக்கிள்
அங்கு மிங்குமாக அல்லாடியது
முதுகை வளைத்துப் போராடினான்
அதன் ஓட்டி
தள்ளுகாற்றில் சென்றவனுக்கோ
அதைப் பார்த்ததும்
மனதில் முகிழ்த்த ஏளனச் சிரிப்பு
உதட்டை விகசித்துப் பிரசவமானது
ஆனால் –
தானும் திரும்பி வரும் வழி
அதுதான் என்பதை
ஏனோ அவன் மறந்தேவிட்டான்
அவன் திரும்பி வரும்போது
வாடையா அடிக்கப் போகுது?
சைக்கிள் சவாரியில் மட்டுமா
மனிதன் இப்படி?
வாழ்க்கையிலுந்தான்!

– கருணைச்சுதன்.

# கோபாலசாமியின் எழுச்சியும் தி. மு. கவில் குமுறும் எரிமலையும்

இந்தியாவிலேயே முதன் முதலாக மாநில அரசைக் கைப்பற்றிக்கொண்ட பிராந்தியக் கட்சி - பார்ப்பனரல்லாதாரின் பெரும்பான்மைச் செல்வாக்குடன்வளர்ந்துவந்த தனிப்பெரும் கட்சி - இந்தியாவில் இருக்கும் அரசியல் கட்சிகளிலேயே உள்கட்சி ஜனநாயக அமைப்பைப் பேணிவரும் கட்சி - எதிர்க்கட்சியாக இருக்கின்றபோதும் சரி, ஆளுங் கட்சியாக இருக்கின்றபோதும் சரி, பலமான கிளை அமைப்புகளுடன் விளங்குகின்ற கட்சி - என்றவாறான பல்வேறு பெருமைகளை' தன்னகத்தே கொண்டிருக்கும் தி. மு. க எனப்படும் திராவிடமுன்னேற்றக்கழகம் இன்று உட்பூசலும், குழப்பமும் மலிந்த ஒருகட்சியாக மாறிக்கொண்டு வருகின்றது. இதற்கு துணைப்பொதுச் செயலாளர் நாஞ்சில் மனோகரன் வெளியேற்றப்பட்டமை ஒரு எடுத்துக்காட்டு.

## நாஞ்சிலார் விவகாரம்

தி.மு.க வின் அறக்கட்டளை நிதியத்தின் உறுப்பினர்களில் ஒருவராகத் தெரிவுசெய்யப்படுவதை எதிர்பார்த்த நாஞ்சிலாருக்கு அப்பதவி கிடைக்கவில்லை. கொதித்துப் போன நாஞ்சிலார், வை. கோபாலசாமியிடம் தன் உள்ளக் குமுறலைக் கொட்டித் தீர்த்தார். தனது உணர்ச்சிகளைக் கலைஞரிடம் தெரியப்படுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார். இத்துடன் தி.மு.க ஆதரவு தரும் தினசரிப் பத்திரிகையான தினகரன் இதழில் நாஞ்சில் மனோகரன் ஒரு கவிதை எழுதினார். அக்கவிதையில் கலைஞரின் பிறப்பை இகழ்ந்திருப்பதாகக் கருதிய கலைஞர் கருணாநிதியும், தி.மு.க தலைமையும் அதிரடி நடவடிக்கையில் இறங்கினர். விளைவு நாஞ்சில் மனோகரன் தூக்கி வீசப்பட்டார். நாஞ்சிலாரின் வீட்டிலிருந்து டெல்லிவரை எங்கும் வியப்பு. தன் சுயமரியாதைக்குப் பாதிப்புஏற்பட்டுவிட்டதைக் கண்டு நாஞ்சிலார் துக்கத்தில் ஆழ்ந்துபோனார்.

நாஞ்சிலார் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதைக் கண்டித்தும், அவர் மீண்டும் கட்சியில் சேர்க்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியும் மதுரையில் பொதுக்கூட்டம் நடந்தது. ஏற்பாடு பொன். முத்துராமலிங்கம். கூட்டத்தில் வை. கோபாலசாமி கலந்து கொண்டு பேசுவார் என்று கொட்டை எழுத்துக்களில் சுவரொட்டிகள் முழங்கின. ஆனாலும் இறுதி நேரம்வரை வை.கோ. வருவாரா? பொதுக் கூட்டத்தில் பேசுவாரா? என்பது கேள்விக் குரியதாகவே இருந்தது. எனினும் வை கோ. மேடையில் தோன்றினார். நாஞ்சிலார் கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்டதைத் தலைமை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று விநயமாக வேண்டுகோள் விடுத்தார் வீரபாண்டி ஆறுமுகமும், பொன். முத்துராமலிங்கமும் கொண்டுள்ள அதேநிலையை தான் மேற்கொள்வதாகக் கோடி காட்டினார்.

## திடீர்த் திருப்பம்

இந்த நிலையில்தான் நாஞ்சில் மனோகரன் தி மு க. தலைமையிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கோரிய காட்சி அடுத்து அரங்கேறியது. மதுரையிலிருந்து நாஞ்சிலாருடன் தொலைபேசிமூலம தொடர்பு கொண்டார் கலைஞரின் மகன் மு. க. அழகிரி. "நீங்கள் அப்பாவிதான் என்பதை அறிவோம்" என்ற பாணியில் வார்த்தைப் பரிமாற்றங்கள் நடந்தது. கலைஞரின் மற்றுமொரு மகனான மு.க. ஸ்டாலினும் தொடர்பு கொண்டார். இந்தப் பேச்சுக்களின் அடிப்படையில் நாஞ்சிலாரின் மன்னிப்புக் கோரும கடிதம் உருவானது. செய்தி பத்திரிகைகளுக்கு பறந்தது. குதிரை கீழே தள்ளி விழுத்திவிட்டு குழியையும் பறித்தது என்று கூறுவார்களே, அதே போல நாஞ்சிலார்தன் மன்னிப்புக் கோரும் கடிதத்தில் தன்னை முடுக்கி விட்டவர்கள் என்று மூவரை இனங்காட்டினார். பொன். முத்து ராமலிங்கம், ஜி லட்சுமணன், செஞ்சி ராமச்சந்திரன் ஆகியோரே இம் மூவர் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் உண்மையில் இந்த மூன்று மாவட்டச் செயலாளர்களும் நாஞ்சிலாரை அண்மையில் சந்திக்கவே இல்லையென்றும். நாஞ்சிலாரை இவர்கள் ஒருபொருட்டாகவே கருதுவதில்லையென்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை 'சமரச முயற்சி' என்ற பெயரில் நாஞ்சிலார் எழுதியது போன்ற கடிதங்கள் வை. கோபாலசாமியிடமிருந்தும். பொன் முத்துராமலிங்கத்திடமிருந்தும் பெறப்பட்டன. பிரச்சினையை மூடி மறைப்பதில் தலைமையின் தந்திரம் இப்போதைக்கு வெற்றி என்ற நிலைதான்.

ஆனால் நாஞ்சில் மனோகரன் மீண்டும் கடசியில் சேர்க்கப் படக் கூடாது என்று தி.மு.க செயற்குழுவும், மாவட்டச் செயலாளர்கள் சிலரும் முடிவு செய்து விட்டனர்.

## வை. கோவும் வெ. கொவும்

மதுரையில் பொன். முத்து ராமலிங்கம் ஏற்பாட்டில் நடந்த பிரமாண்டமான பொதுக் கூட்டத்தை கண்டு மு.க. அழகிரி மற்றும் பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் போன்றோர் கடுப்பாகினர். போட்டிக்கூட்டம் நடத்துவது என்று திடீர்முடிவு எடுத்தனர். இக் கூட்டத்தில் வை. கோ. எனப்படும் வை. கோபாலசாமிக்கு நிகராக வெ. கொ. பேசுவார் என்று சுவரொட்டிகள் பிரமாதமாக விளம்பரப்படுத்தினயார் இந்த வெ. கொ. என்று திருதிருவென முழித்தவர்கள் பின்னர் தி மு. கவின் அதிரடிப் பேச்சாளர் வெற்றி கொண்டான்தான் பெயர் சுருக்கி வெ. கொ. ஆகி இருக்கின்றார் என்பதைக் கண்டு கொண்டனர்.

## இளையவன்

இதேவேளை வை.கோபாலசாமிக்கும் கட்சியிலிருந்து கல்தா கொடுக்க தி. மு. க தலைமைத் திட்டம் போட்டுள்ளது. இதற்காக அறிக்கைகள் மற்றும் புரளிகள் மூலம் புகழ் பெற்றவராக விளங்கும் ஜனதாக்கட்சித் தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான டாக்டர் சுப்பிரமணியசுவாமியின் உதவியும் நாடப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது. வை. கோபாலசாமியை விடுதலைப் புலிகளுடன் தொடர்புபடுத்தி பயங்கர குற்றச்சாட்டுகளை டாக்டர் சுவாமி அடுக்கிச் செல்ல, அவற்றின் அடிப்படையில் வை. கோ. மீது தி.மு.க. தலைமை நடவடிக்கை எடுக்கும் சூழல் உருவாக்கப்படும் என்றும கூறப்படுகிறது.

இதேவேளை வை. கோவை ஓரங்கட்டும் முயற்சிகள் தி. மு. க. தலைமையினால் திட்டமிட்டு மேற்கொள்ளப் படுவதாகவும் தெரியவருகின்றது. தி. மு. கவின் நீண்டகால உறுப்பினரும், வை. கோவின் தீவிர ஆதரவாளருமான ஒருவர் வை. கோ தலைமையில் திருமணம் செய்ய ஆசைப்பட்டு அழைப்பிதழ் அச்சிட்டார் அவருக்கு உடனேயே கட்சியிலிருந்து கல்தா கொடுக்கப்பட, அந்த அதிர்ச்சியிலேயே அவர் இறந்து போனார். இது வை கோவை ஓரங்கட்டும் முயற்சிக்கு ஓர் உதாரணமாகும்.

இந் நிலையில் கலைஞரின் பிறந்த நாளுக்கு மறுநாள் கலைஞரை அவரது கோபாலபுரம் இல்லத்தில் வை. கோ. சந்தித்தார். அதிகாலை ஆறு மணிக்கு இடம்பெற்ற இந்தச் சந்திப்பு சுமார் ஒன்றரை மணிநேரம் நீடிக்க மனம் விட்டுப் பேசினார். வை. கோ. தனது தொகுதியிலேயே தன்னை ஓரங்கட்டும் முயற்சிகள் நடப்பதை சுட்டிக்காட்டினார். தனது ஆதரவாளர்கள் என்ற காரணத்திற்காகவே பலர் பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப்பட்டு ஆலடி அருணாவின் ஆட்கள் நியமிக்கப்படுவதை எடுத்துச் சொன்னார். இவர்கள் எனக்கு வீண் தொல்லை தருவார்கள் பதிலுக்கு நான் ஏதாவது செய்தால் என்னைப் பற்றி உங்களிடம் புகார் சொல்வார்களே இது சரியா ...... என்று முறையிட்டார். ஆனால் கலைஞர் அலசந்து கொடுக்கவில்லை.

"இப்போது தானே அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அப்புறம் பார்க்கலாம்" என்று கருணாநிதி சாவகாசமாய் பதிலளித்துள்ளார்.

"நான் என்ன தவறு செய்தேன்? எதற்காக என்னை பழி வாங்குகிறீர்கள்? நான் உங்கள் காலடியில் தானே இருக்கிறேன்?" என்று வை. கோ. புலம்பியதையோ அல்லது "என்னைத் துரோகியாகச் சித்தரிப்பதை மட்டும் என்னால் தாங்க முடியாது" என்று அவர் கண்ணீர் சிந்தியதையோ கலைஞர் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

ஆனால் "உச்சக் கட்டக் காட்சியின் போது இது இடைவேளைதான் கட்சியில் புரையோடிப் போயிருக்கும் புகைச்சலின் விளைவு இது. வை. கோவை மேலிடம் ஜீரணிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது எனவே வை. கோ. மன்னிப்புக் கேட்டு மன்றாடிக் கொண்டிருக்க வேண்டியதில்லை" என்றே அவரது ஆதரவாளர்கள் கருதுகின்றனர்.

கட்சிக்கு சொத்துகளும், நிதியும் தான் முக்கியம் என்றால் இருபது வருடங்களுக்கு முன்னர் இடம் பெற்றவை மீண்டும் நிகழ்வதை தவிர்க்க முடியாது என்றே கருதப்படுகின்றது


அரியாலை

**சிற்றம்பலம் விளையாட்டுக் கழகம்**

நடாத்தும்

வடமாநில ரீதியிலான

மாபெரும் சுற்றுப் போட்டிகள்

01. கிரிக்கெற் [மென்பந்து 6 பேர் ஏழு ஓவர்கள்]
02. கரப்பந்து [சுற்றுப் முறையிலானது]

சிறந்த கழகங்கள், வீரர்களுக்கான உயரிய பரிசில்கள் காத்திருக்கின்றன.

விண்ணப்ப முடிவுத்திகதி :- 10-08-1993

தொடர்பு கொள்ளவேண்டியது:

"மேகாஸ் வீடியோ சென்ரர்"

மாம்பழம் சந்தி, கண்டிவீதி, அரியாலை.

அல்லது

திரு. சரா. புவனேஸ்வரன் (செயலாளர்)
1. கனகரட்ணம் வீதி, அரியாலை.

விளம்பர அன்பளிப்பு
"மேகாஸ் வீடியோ உரிமையாளர்" [5501]
திரு. R. இரவீந்திரன் அவர்கள்,


**4ம் ஆண்டு நினைவலைகள்**



தமிழனாக:
23. 10. 1985

தமிழுக்காக:
23. 07. 1989

செல்வன்

**கந்தையா வேலாயுதகுமாரர்**

[தம்பி]

நெடிதுயர்ந்து நின்ற மறவனிவன்
நெஞ்சில் விடுதலை சுமந்த வீரன்
விடிவு தேடியே வேகும் மண்ணுக்காய்
வேவு ஆயிரம் வேகமுடன் பார்த்தவன்
தலைவன் மீதிலே பற்றுக் கொண்டவன்
தாகத்தோடு தேசத் துரோகியை தேடியவன்
முலையருந்திய வீரமும் கொண்டதால்
மூண்ட நெருப்பது துரோகியைச் சுட்டது.

அண்ணனே! உம் நினைவு படியும் நெஞ்சுடன் நிமிர்கின்றோம் உன் நாமம் அழியாது, நாம் தமிழர் வெல்லுவோம்.

"வேலாயுதகுமாரர் வீதி,"
சுன்னாகம்.

அப்பா,
அன்புத் தங்கைகள்.

(5418)


முதியோர் இல்லம்

இளம் வயதில் சுறுசுறுப்பாக பணியாற்றி .... வயது முதிர்ந்த வேளையில் எவரது உதவியுமின்றி தனிமையில் தவிக்கின்றீர்களா?

உங்களுக்காக அமைதியான சூழலில்
புத்தூர் வைத்தியசாலைக்கு அருகாமையில்

**முதியோர் இல்லமொன்றை ஆரம்பிக்கின்றோம்**

பெயர், விலாசம், வயது, தங்களால் மாதாந்தம் கொடுக்கக்கூடிய தொகை ஆகியவற்றைக் குறிப்பிட்டு 30.07.93க்குபிந்தாமல் விண்ணப்பியுங்கள். தனியானவர்களும், தம்பதிகளும் விண்ணப்பிக்கலாம்.

**மெதடிஸ்த திருச்சபை புனர்வாழ்வுப் பகுதி**

சி. எல். எஸ். புத்தகசாலை,
570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(5430)

கொழும்பில் கைதான

## மலையக வாலிபருக்கு விசித்திரமான அனுபவம்

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் பொலிசாரால் கைதான மலையக வாலிபர் ஒருவர் நீதிமன்றத்தில் வித்தியாசமான அனுபவத்திற்கு இலக்கானார்.

புறக்கோட்டைப் பகுதியில் கைதான ஜெகதீஸ்வரன் என்னும் இம்மலையக வாலிபர் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப் பட்டபோது அங்கு மஞ்சள் நிற சேர்ட் அணிந்திருந்த ஒருபர் சட்டத்தரணியை ஏற்பாடு செய்துதருகிறேன்என்று கூறி அவரிடமிருந்த பணத்தைப் பலவந்தமாகப் பறித்துச் சென்றார்.

நீதிமன்ற வளவை விட்டு வெளியேற முற்பட்ட சட்டத்தரணி ஒருவரின் உதவியுடன் ஜெகதீஸ்வரன் விடயத்தை நீதிவானின் கவனத்திற்கு உடனடியாகவேகொண்டுவந்ததை அடுத்து மஞ்சள் நிற சேட் போட்டிருந்த வாலிபர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார். குற்றத்தை ஏற்றுக் கொண்ட அவ்வாலிபருக்கு இருவார கடூழியச் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

நூறு ரூபா பிணையில் விடுவிக்கப்பட்ட ஜெகதீஸ்வரன் மீண்டும் கடந்த 28ஆம் திகதி மன்றில் ஆஜரானபோது விடுதலையானார்.

## விமானப் படைத் தளபதி பதவிக் காலம் நீடிப்பு

(கொழும்பு)

விமானப்படைத் தளபதி எயர்வைஸ் மார்ஷல் டெரன்ஸ் குணவர்த்தனாவின் பதவிக் காலத்தை பாதுகாப்பு அமைச்சு மேலும் ஆறு மாத காலத்திற்கு நீடித்துள்ளது. இவரின் பதவிக்காலம் ஆகஸ்ட் 15ஆம்திகதியுடன் முடிவடைய இருந்ததும் தமது பதவிக் காலத்தை மேலும் ஆறு மாத காலத்திற்கு நீடிக்குமாறு குணவர்த்தனா கோரிக்கை விடுத்திருந்தமை தெரிந்ததே.


இதேசமயம் தற்போது 90 ஆயிரம் பேரைக் கொண்ட சிறிலங்கா இராணுவத்தின் பலத்தை ஒரு லட்சமாக உயர்த்தும் பொருட்டு தற்போது தென்னிலங்கையில் பல இடங்களிலும் இராணுவ ஆட்சேர்ப்பு இடம்பெற்று வருகின்றது.

## 500 வீதி விளக்கு அமைக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேலும் ஐந்நூறு வீதி விளக்குகளை அமைக்க யாழ். மாநகரசபை வடகிழக்கு மாகாண சபைகளின் அனுமதியை கோரியுள்ளது.

மேற்படி வீதி விளக்குகளை அமைக்க தம்மிடம் தற்சமயம் நிதிப் பற்றாக்குறை நிலவுவதாகவும். இதற்கான நிதியினை சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. [பா][நி]




## புதியகல்விவலயங்களுக்கு பணிப்பாளர்கள் நியமனம்

யாழ்ப்பாணக் கல்வி வலயம் இரண்டிற்கான கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப் படவுள்ளார்கள். இப் பதவிகளை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை வரும் 29 ஆம் திகதியன்று வட-கிழக்கு மாகாணக் கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மூன்றாவது கல்வி வலயம் ஒன்று அமைப்பது குறித்து வடகிழக்கு மாகாணக் கல்வி, கலாசார, விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் மத்திய கல்வி அமைச்சுக்குச் சிபார்சு செய்துள்ளார் என யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## இன்றைய பிரச்சினைக்கு ராணுவநடவடிக்கையேதீர்வு

சு. க. எம். பி. குணசேகர

(கொழும்பு)

நாட்டில் இன்று இனப்பிரச்சினை நிலவவில்லை. பயங்கரவாதப்பிரச்சினையே நிலவுகின்றது. இதனை இன்றையஜனாதிபதியும் இனங்கண்டுள்ளார். இப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலமே தீர்வு காண வேண்டும். இவ்வாறு கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், சிங்கள சட்டத்தரணிகள் சங்கத் தலைவருமான எல்.எல். குணசேகர தெரிவித்தார்.

கொழும்புபொதுநூலகத்தில் கடந்த வியாழனன்று'வடக்கு, கிழக்கு பிரச்சினையும் அதன் வரலாறும் அதற்கான தீர்வும்'' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில் இலங்கையின் அரசியலமைப்பின்படி தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் உட்பட நாட்டில் வாழும் அனைத்து மக்களும் சம உரிமை, சம சலுகைகளையே அனுபவிக்கின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள இராணுவமுகாம்களில் முப்பது வீதமான முகாம்களுக்கு இன்று வாகனங்கள் இல்லை. ஆனால் கொழும்பில் நடைபெறவுள்ள 'லோ ஆசியா' மாநாட்டிற்கென பல கோடி ரூபா செலவில் 'பென்ஸ்' வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

# உண்ணாவிரதம் தோல்வி; முடிவுற்றமைக்கு மகிழலாம்

## கருணாநிதி கருத்து

(சென்னை)

முதல்வர் ஜெயலலிதாவின் உண்ணாவிரதம் வெற்றியளிக்கா விட்டாலும், அவர் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டிருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைவதாக தி.மு.க தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

காவிரிநதிநீர் பங்கீடு தொடர்பான சர்ச்சைகளை பேச்சுக்கள் மூலம் தீர்த்துக்கொள்ள இது நல்ல சந்தர்ப்பம் என்று காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் வி என். காட்கில் புதுடில்லியில்செய்தியாளர் மத்தியில் பேசும்போது தெரிவித்தார்.

உண்ணாவிரதம் முடித்துக் கொள்ளும் தீர்மானம் நல்ல முன்னேற்றம் என்று குறிப்பிட்ட பாரதிய ஜனதாக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் இப்பிரச்சினைக்கு தீர்வு காணும்போது சம்பந்தப்பட்ட மாநிலங்களின் நலன்களை மத்திய அரசு பாதுகாக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நடுவர் மன்றத் தீர்ப்பின் செயற்பாட்டை கண்காணிக்க குழு நியமிக்கப்படும் என்ற உறுதிமொழி வெறும் கண் துடைப்பே ஆகும் என்று பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் டாக்டர் ராம்தாஸ் கூறியுள்ளார்.

உண்ணாவிரதம் முடிக்கப் பட்டிருப்பதை வரவேற்றுள்ள திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி இப்போதையநிலையில்மத்தியஅரசின் பொறுப்பும்பணியும்அதிகமானதாகி உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## கண்காணிப்பு குழு அமைப்பு; கர்நாடக அரசு எதிர்ப்பு

(பெங்களூர்)

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை அமுல்படுத்துவதை உறுதிப்படுத்தும் வகையில் கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கும் யோசனைக்கு கர்நாடக மாநில அரசு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

காவிரிப் பிரச்சினையைப் பற்றி விவாதம் நடத்திய கர்நாடக அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர் வீரப்பமொய்லி, மேலும் கூறுகையில் காவிரியிலிருந்து தண்ணீர் விடுவிப்பது குறித்து கர்நாடக அரசு எந்த உறுதிமொழியையும் அளிக்கவில்லை எனவும், பருவமழையைப் பொறுத்தே இது அமையுமெனவும், பருவமழை சாதகமாக இருந்தால் காவிரியில் நீர் திறந்து விடப்படும் எனவும் தெரிவித்தார்.

## காவிரிநீர் பிரச்சினைக்கான தீர்வு ஏமாற்றம் தருகிறது

### வாழப்பாடி தெரிவிப்பு

(சென்னை)

காவிரிநீர் பிரச்சினையில் மேற் கொள்ளப்பட்டிருக்கும் முடிவு மிகுந்த ஏமாற்றத்தை தரும் ஒன்றாகும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாழப்பாடி இராமமூர்த்தி புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டிருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைவதாகவும் குறிப்பிட்டார்.

## நாஞ்சிலார் — ஆளுநர் சந்திப்பு

(சென்னை)

தி. மு. கவிலிருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் துணைப் பொதுச்செயலாளர் நாஞ்சில் மனோகரன் நேற்று முன்தினம் சென்னையில் தமிழகஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டியை சந்தித்துப் பேச்சு நடத்தினார் ராஜ்பவனில் நடைபெற்ற இச் சந்திப்பு அரை மணி நேரம் நீடித்ததாகக் கூறப்படுகிறது.

## யாழ். மாநகர நூலக நூல்கொள்வனவிற்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை ஆணையாளர் சிறிலங்கா அரச உயர் அதிகாரி பிரட்மன் வீரக்கோனைச் சந்தித்து யாழ். மாநகர சபையின் சில முக்கிய பிரச்சினைகள் சம்பந்தமாக கலந்தாலோசனை நடத்தியுள்ளார்.

இச் சந்திப்பில் முக்கியமாக யாழ். மாநகரசபையின் நூலகத்திற்கு தேவையான மேலதிக நூல்களை கொள்வனவு செய்வது சம்பந்தமாக கலந்துரையாடியுள்ளார்.

மேலும் புதிய கட்டடங்கள் கட்ட தற்சமயம் இங்கு வசதியில்லாமல் இருப்பதை அடுத்து அந்த நிதியையும் நூல்களை கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்துவது சம்பந்தமாயும் கலந்தாலோசனை நடத்தப்பட்டுள்ளது. (பா,நி)

## பல்கலைக் கழக கல்வி தனியார் மயமாகும்?

பல்கலைக்கழகங்களை நிர்வகிக்க தனியார் துறையின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளுமாறு உலகவங்கி சிறிலங்கா அரசுக்கு சிபார்சு செய்துள்ளது. இவ்வாறு பல்கலைக் கழகங்கள் தனியார் மயப் படுத்தப்படுமானால் ஏழை மாணவரே பாதிப்புறுவர் என்றும், கட்டணங்கள் அதிகமாக அறவிடப்படும் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

## துறைநீலாவணை பகுதியில் மாடு திருட்டு அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

துறை நீலாவணை பகுதியில் மக்கள் நடமாட்டம் பிற்பகல் ஆறு மணிக்கு பின்னர் பாதுகாப்பு படையினரால் தடை செய்யப்பட்டிருப்பதால் மந்தைகள் திருட்டு அதிகரித்து இருப்பதாக அப்பகுதி தமிழ் மக்கள் கூறியுள்ளனர்.

பசு மாடுகள் மற்றும் விவசாயத்துக்குப் பயன்படுத்தும் எருமை மாடுகள் அடிக்கடி காணாமல் போவது குறித்து இப் பகுதிமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

துறைநீலாவணை கிராமத்தின் நுழைவாயிலான பெரிய நீலாவணையில் மட்டும் அதிரடிப் படை முகாம் ஒன்று அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# தொண்டர் ஆசிரியர்கள் சமுகம் தரக் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ். கல்வித் திணைக் களத்தின், கோட்டக் கல்வி அலுவலகத்தின் எழுத்து மூல மான அங்கீகாரத்துடன் 1989-01-01 ஆம் திகதியில் தொண்டர் ஆசிரியர் நியமனம் பெற்று சேவையாற்றியவர்கள் அங்கீகாரக்கடிதங்களுடன் எதிர்வரும் 27 ஆம் திகதி பி.ப. 3 00 மணிக்கு முன்னதாக யாழ். கல்வித் திணைக் களத்தின் ஆசிரியர் நிர்வாக கிளைக்கு தவறாது சமுகம் தருமாறு யாழ். கல்வித்திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை. தியாகராஜா கேட்டுக் கொண்டுள்ளார்.

அங்கீகாரக் கடிதங்களை தவறவிட்டவர்கள் தமதுபாடசாலை அதிபரிடம் இருந்து சேவை விபரத்தைப் பெற்று அதை சம்பந்தப்பட்ட கோட்டக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் அத்தாட்சியுடன் கொண்டுவரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எதிர்வரும் 26 ஆம் திகதிக்குப் பின்னர் இது தொடர்பான எந்தவொரு கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படாதென யாழ். கல்வித்திணைக்கள பிரதிக் கல்விப்பணிப்பாளர் கூறியுள்ளார் (பா(.'தி)

## நிவாரண

கைகளையும் தாங்கிச் சென்றனர்.

மடு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு வந்த பேரணியினர் அரச அதிபர், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு, உதவி அரசாங்க அதிபர், ஜனாதிபதி ஆகியோருக்கு மகஜர்களைக் கையளித்தனர்.

அங்கிருந்து சென்ற பேரணி மன்னார் மாவட்ட ஆயர் ராயப்பு ஜோசப் அவர்களிடமும் அகதிகளுக்கான ஐ நா. உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதி ஆகியோரிடமும் மகஜர்களைக் கையளித்தனர்.

# வீரவணக்க கூட்டம்

திருக்கோணமலை மாவட்ட இடம்பெயர்ந்த மக்களால் லெப். செல்லக்கிளி அம்மான் அவர்களின் 10 ஆம் ஆண்டு வீரவணக்கக் கூட்டம் இன்று பி.ப 4.30 மணியளவில் அரியாலை லெப். செல்லக்கிளி அம்மான் வீடமைப்புத் திட்டத்தில் உள்ள மாவீரர்கள் மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது.

❋

நல்லூர் வடடப் பிரதேசத்தைச் சேர்ந்த 7ஆம் மாதங்களில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டமாவீரர்களை நினைவுகூர்ந்து திருநெல்வேலிகிழக்கு வாலையம்மன் கோவில் முன்றலில் இன்று இரவு 7.30 மணிக்கு வீரவணக்கக் கூட்டம் நடைபெறும் இவ் வீரவணக்கக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கருத்துரையாற்றி நிறைவுற, கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 22-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10533

வடபகுதிக்குஉள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-1049, 27-8155, 41-3931, 26-3893, 28-4367, 42 2157, 27-0991, 41-5599, 26-0375, 41-6686, 26-6775, 27-5187, 27 9105, 27-7952, 26-0573, 27-9756, 27-9365, 27-8959

யாழ். பல்கலைக்கழக தொழிலாளர் கல்விக் கழகத்தின் "துலங்கல் III" சஞ்சிகை நிதிக்கான

# "மாபெரும் கலைச்சோலை"

இடம்:- கைலாசபதி கலையரங்கம்
யாழ். பல்கலைக்கழகம்.

காலம்:- 24 – 07 – 1993 சனிக்கிழமை
பி.ப. 2.00 மணி

தலைவர்:- திரு. வே. சிவநேசன்
(தலைவர், தொழிலாளர் கல்விக்கழகம்)

I. கெஞ்சிற் கச்சேரி

| | |
|---|---|
| நாதஸ்வரம்:- | அளவையூர் என். கே. பத்மநாதன் |
| வயலின்:- | இசைஞானதிலகம் உ. இராதாகிருஸ்ணன் |
| தவில்:- | ரீ. உதயசங்கர் |
| மிருதங்கம்:- | க. கண்ணதாசன் |
| கடம்:- | சதாவேல்மாறன் |
| மொரிஸ்ங்:- | எஸ். ராஜா |

II. நாடகம்

"இனிஒரு விதிசெய்வோம்"

கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் உருவானது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தொழிலாளர் கல்விக்கழகம்
யாழ். பல்கலைக்கழகம்.

அன்பளிப்பு ரூபா 10-00, 50-00

(5505)

## பிற்போடப்பட்டது

தவிர்க்கமுடியாத காரணத்தால் இன்று வெள்ளிக்கிழமை யாழ் / வேலாயுதம் ம. வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த கல்விஅபிவிருத்திக் கழக நிதிப்பயன்பாடு பற்றிய கலந்துரையாடல் 27/7/1993 செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறுமென பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை அறிவித்துள்ளார்.

## சிங்கள

பட்ட அவலப் படுகொலைகள்.

இணைந்து வாழ விரும்பிய மக்களின் உரிமைகளைப் பறித்து, உரிமைவேண்டி அமைதி வழியில் போராடிய மக்களை ஆயுதமுனையில் நசுக்கி தமிழ் மக்கள் மீது இனவெறித் தாக்குதல்களை நடத்திய சிங்கள ஆட்சியாளர்களை கொடிய இனவெறியர்கள் என உலகுக்கு எடுத்துக்காட்டிய நாட்கள் தான் ஜூலை 25, 27 வெலிக்கடைச் சிறைப் படுகொலை நாட்கள்.

சிங்கள சிறிலங்கா ஆட்சியாளர்கள் தமது கைகளில நிலையான கறையாக குருதிச்சுவடுகளைப் பதித்துக்கொண்ட அந்த நாட்கள் தமிழினத்தைப் பொறுத்தவரை துயர் தோய்ந்த கறுப்பு நாட்கள். தமிழீழ மக்களின் விடிவுக்காகப் போராடிய பல முன்னோடிப் போராளிகள் வெலிக்கடைச் சிறையில் சிங்கள அரசின் இனவெறிப் படையினராலும், நூற்றுக்கணக்கான குண்டர்களினாலும் சித்திரவதைக்குள்ளாகி அவலச் சாவை அணைத்துக்கொண்ட நாட்கள்.

தலைசிறந்த போராளிகள் பலரை ஈழத் தமிழினம் போர்க்களத்திலன்றிச் சிங்களவரின் சூழ்ச்சிக்கும், விலங்குத் தன்மைக்கும் பறிகொடுத்த நாட்கள்.

ஆகக்கூடுதலான பாதுகாப்பைக் கொண்டதான சிறைக்கூடத்தில் எமது வீரர்களும், தமிழ் இளைஞர்களும் காட்டு விலங்குகளைப்போல் சிங்கள குண்டர்களினால் சாகடிக்கப்பட்ட நாட்கள்.

ஜூலை 25ஆம் நாள் 36 பேர் சாகடிக்கப்பட்ட பின்பும் கூட ஏனையோர்க்குப் பாதுகாப்பு கொடுக்காது இரு நாட்களின் பின் மீண்டும் 17பேரைச் சாகடித்ததன் மூலம் சிங்கள அரசு தான் தமிழ் மக்களுக்கு எதிரான அரசு என்பதை உலகுக்கும் உணர்த்தி தமிழ் மக்கள் உள்ளத்திலும் உறுதி கொள்ள வைத்த அந்தக்கறை படிந்த நாட்கள்.

அவலச்சாவை அணைத்துக் கொண்ட அந்த மாவீரர்களையும் தமிழிளைஞர்களையும் அப்பாவிப் பொதுமக்களையும் நினைவில் நிறுத்திக்கொள்ளும் நாட்களாகவும், தமிழீழ விடுதலையை விரைந்து பெறுவோமென உறுதியெடுத்துக் கொள்ளும் நாடகளாகவும் தமிழீழ மக்கள் கடைப்பிடிக்க வேணடும்.

தமிழினத்தின் கண்களைப் பனிக்க வைக்கும் அந்தக் கறுப்பு நாட்களில் நாம் கேளிக்கை, பொழுது போக்கு நிகழ்வுகளைத் தவிர்ப்போம்!

அவலச் சாவடைந்த அந்த மாவீரர்களின் 10ஆம் ஆண்டு நினைவு நாட்களை நாம் நினைவு கூர்ந்து அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்துவோம்!!

தமிழீழ விடுதலையை விரைந்து வென்றெடுப்போமென உள்ளத்தில் உறுதி பூணுவோம்!!!

## பெறுபேறுகள்

பெறுபேறுகளை யாழ். இந்துக் கல்லூரியில் இயங்கும் தொலைக்கல்வி நிலையத்தில் இன்று பெற்றுக் கொள்ளுமாறு சிரேஷ்ட போதனாசிரியர் ச.சரவணமுத்துவின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

# ஜெனரேற்றர் திருத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவ மனையில் பாவனையில் இருந்து பழுதடைந்த 85 கே. வி. மின் பிறப்பாக்கி மீண்டும் பாவனையில் ஈடுபடுத்தப்பட வுள்ளது.

இந்த மின்பிறப்பாக்கி பழுதடைந்ததன் மூலம் போதனா மருத்துவ மனையில் பல முக்கிய பாவனைக்கு மின்சாரம் இன்றி சிரமமேற்பட்டது தெரிந்ததே. திருத்தியமைக்கப்பட்ட இந்த மின்பிறப்பாக்கி இன்று தொடக்கம் பாவனையில் ஈடுபடுத்தப்பட இருப்பதாக தெரியவருகின்றது. [சி]

## தொடர்பு

விளங்கிக் கொள்ளக்கூடிய மறைப்புச் சொற்களைப் பிரயோகித்து வழமையான செய்திகள் போன்று இவற்றைப் பரிமாறுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எனவே இச்சேவையானது பொதுமக்களின் நன்மைகருதியே ஆரம்பிக்கப்பட்டது என்பதனை கருத்தில் கொண்டு தவறான வழிகளைக் கையாண்டு செய்திகள் பரிமாற்றம் செய்ய முற்படுபவர்கள் இவ்வாறான தவறான வழிகளை கையாள்வதனைத் தவிர்த்து இச்சேவை நல்லமுறையில் செயற்பட ஒத்துழைக்கும் வண்ணம் கேட்டுக் கொள்வதுடன் இவ்வாறான தவறான முறையில் செய்திகள் கையளிப்போர் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் அவர்களிற்கு ஏற்படும் அசௌகரியங்களிற்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும் என்பதனை போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு பொதுமக்களிற்கு அறியத் தருகின்றது.

## கடற்படைக்கு

னர் வெளிச்சம் போட்டவாறு வேட்டுக்களை சரமாரியாக ஏவியதில் இரு மீனவர்களும் செய்வதறியாத நிலையில் மீன்பிடிப் பொருள்களை கடலில் கைவிட்ட நிலையில் கடலில் குதித்து நீந்த ஆரம்பித்தனர்.

நாகர்கோவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு எட்டு மணிக்கு நீந்த ஆரம்பித்த இருவரும் ஆகாரம் எதுவுமின்றி இருள் சூழ்ந்த நேரத்தில் திசைகள் மாறிய நிலையில் எதிர்நீச்சலிட்டு களைப்படைந்து சோர்வடைந்த நிலையில் முனைக் கரையை வந்துசேர்ந்தனர். (யோ)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா செல்லையா

உடுவிலைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்லையா 22-7-93 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் திருஞானப்பூங்கோதையின் அன்புக் கணவரும், கோபாலரத்தினம் (இளைப்பாறிய இலிகிதர்), சீவரத்தினம் (நில அளவையாளர்-கனடா), மகேஸ்வரி, யோகேஸ்வரி, இராசரத்தினம் (சுவிட்சர்லாந்து), விஜயரத்தினம் (யாழ். செஞ்சிலுவைச் சங்கம் - கோப்பாய் கிளை) ஆகியோரின் தந்தையும், வைத்திஜோதி திலகவதி (வைத்திய அதிகாரி – அரசினர் வைத்தியசாலை, அச்சுவேலி), அரியமலர் (படவரைஞர் -கனடா), பரமநாதன் (ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்), கிருபாகரன் (ஆசிரியர்-றோயல் கல்லூரி, கொழும்பு), சறோஜாவதி (சுவிட்சர்லாந்து) ஆகியோரின் மாமனாரும், பிரதீபன், கிருபைராஜ் (யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), துஷ்யந்தி, நிஷந்தி, தர்மினி [யாழ் இந்து மகளிர் கல்லூரி] பிறேமறாஜ் [சைவத்தமிழ் வித்தியாலயம் - கல்வியங்காடு], தவஜினி, றாஜினி [கனடா], சுபிதா [சுவிட்சர்லாந்து], இலட்சன்யா, பிரணவன், பிரியங்கன் ஆகியோரின் அன்புப் பேரனும், சபாபதி, காலஞ்சென்ற பொன்னம்மா, சண்முகம, மயில்வாகனம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பத்மநாதன், காலஞ்சென்ற லீலாவதி மாணிக்கவாசகர், இராசரத்தினம ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23-07 93) வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

68, புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
(5508)

தகவல்;
செ. கோபாலரத்தினம்
(மகன்)

## திருமதி விசாலாட்சிப்பிள்ளை

வடமராட்சியைச் சேர்ந்த காலஞ்சென்ற குழந்தைவேலு (Pilot Officer - Burma) அவர்களின் அன்பு மனைவியும், வவுனியாவை வசிப்பிடமாகக் கொண்டவருமான விசாலாட்சிப்பிள்ளை 22-07-1993இல் சாவகச்சேரியில் மகனின் இல்லத்தில் காலமானார். இவர் திரு. திருச்சிற்றம்பலம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் -நீர்ப்பாசனத் திணைக்களம்), திருமதி சிறிகாந்திமதி (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திரு. சேதுகாவலர் (Tractor Unit Instructor), திருமதி தி. இராஜேஸ்வரி) ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியாரும, திருமதி திருமகள் சந்திரநாதன், கதிர்மகள், பரந்தாமன். வவுனியாவைச் சேர்ந்தவர்களான றஜினி, மாலினி, சிவாஜினி, தியாகினி, வீரச்சாவடைந்த 2ஆவது லெப். கண்ணன, றங்கன், காலஞ்சென்ற ராஜன், நந்தினி, சாந்தினி ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 23-07-1993 (இன்று) வெள்ளி காலை 10.00 மணிக்கு சாவகச்சேரியில் நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

'ராஜ் மகால்'
மடத்தடி வீதி,
சாவகச்சேரி. (5504)

திரு கு. திருச்சிற்றம்பலம்
(மகன்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.